# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. V Issue 7 October 2015

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்

பக்கம்

லைப் டிவைன் . . . . . . . . . . . . . . 2

இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . 14

சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . 15

யோக வாழ்க்கை விளக்கம். . . . . . 17

பூரணயோகம் - முதல் வாயில்கள் 20

அஜெண்டா . . . . . . . . . . . . . . . 22

வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள் . 24

தனித்தன்மையும் அதற்குரிய அடையாளங்களும் . . . . . . . . . 27

நிலையான சமர்ப்பணம் — நெடு நாளைய யோகம். . . . . . . . . . . 31

அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . 37

அன்பர் அனுபவம் . . . . . . . . . . . 44

**அன்னை இலக்கியம்**

பெண்ணின் பெருமை . . . . . . . . 48

### ஜீவியத்தின் ஓசை

*அன்னையின் பேரம் பொருளையும் விலையையும் கொடுப்பது.*

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

**ஸ்ரீ அரவிந்தம்**

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆங்கிலம்: லெஸ்லி ஜேக்கப்ஸ்
தமிழாக்கம்: வித்யா ரங்கன்
திருத்தம்: ஸ்ரீ கர்மயோகி

### XXVIII. Supermind, Mind and the Overmind Maya

Page 284
Para 13

And still we can recognise in the Overmind the original cosmic Maya.
It is not a Maya of Ignorance but a Maya of Knowledge.
It is yet a Power which has made the Ignorance possible, even inevitable.
Each principle loosed into action must follow its independent line.
It must carry out its complete consequences.
If this is so, the principle of separation must also be allowed.
It must be allowed its complete course.

It must arrive at its absolute consequence.
This is the inevitable descent, facilis descensus.
Consciousness, admitting the separative principle, follows this descent.
It follows this till it enters, by obscuring infinitesimal fragmentation, tucchyena.
It enters into the material Inconscience.
It is the Inconscient Ocean of the Rig Veda.



### 28. சத்திய ஜீவியம், மனம், தெய்வீக மனத்தின் மாயை

இருந்தாலும் தெய்வீக மனத்தில் நாம் மூலமான பிரபஞ்ச மாயையை அடையாளம் காண முடியும்.
அது அறியாமையின் மாயையல்ல, அறிவின் மாயை.
இருந்தாலும் அது அறியாமையை சாத்தியமான, தவிர்க்க முடியாத ஒன்றாக ஆக்கிய ஒரு சக்தி.
தனித்தனியாகப் பிரிந்த தத்துவங்கள் அதனதன் சொந்த சுதந்திரமான வழியைப் பின்பற்ற வேண்டும்.
அதன் முடிவை முழுமையாக அது நிறைவேற்ற வேண்டும்.
அப்படியானால், பிரிவினைக்கான தத்துவமும் அனுமதிக்கப்பட வேண்டும்.
அது அதன் பாதையில் முழுமையாக அனுமதிக்கப்பட வேண்டும்.
அதன் முடிவை அது பூரணமாக அடைய வேண்டும்.
இந்த இறக்கம் தவிர்க்க முடியாதது.
ஜீவியம் தான் தனித்துப் பிரியும் விதியை ஏற்று இறங்குகிறது.

துச்சமான அணுவாகி அதனுள் நுழையும்வரை இதைத் தொடர்கிறது.
ஜட இருளுக்குள் அது நுழைகிறது.
ரிக் வேதம் அதை ஜட இருளாலான சமுத்திரம் என்கிறது.

And by its own greatness the One is born from that.
Yet it is still at first concealed.
It is concealed by a fragmentary separative existence.
It is concealed by a consciousness which is ours.
In that consciousness we have to piece things together to arrive at a whole.
It is a slow and difficult emergence.
In that, a certain semblance of truth is given to the dictum of Heraclitus.
He declared that War is the father of all things.
For each idea, force enters into collision with others.

Each separate consciousness and living being collides with others.
By the very necessity of its ignorance it does this.

And it tries to live, grow and fulfil itself by independent self-assertion.
It does not try to grow by harmony with the rest of existence.
Yet there is still the unknown underlying Oneness.

It compels us to strive slowly towards some form of harmony.
It compels us to strive for interdependence and concord.

It compels us to strive for a difficult unity.



பரமாத்மா அதிலிருந்து பிறக்கும் சிறப்புப் பெற்றது.
இருப்பினும் முதலில் அது மறைந்து உள்ளது.
அணுவாக தனித்துப் பிரிந்து அதனுள் மறைந்துள்ளது.
நம் ஜீவியம் அதை மறைத்துள்ளது.
அந்த ஜீவியத்தில் நாம் தனித்தனியானவற்றைச் சேர்த்து முழுமையை அடைய வேண்டியுள்ளது.
அது நிதானமான மற்றும் கடினமான வெளிப்பாடாகும்.
அது ஹெராக்லிடஸ் வெளியிட்ட ஒரு கருத்தின் உண்மையை ஒத்துள்ளது.
அவர் போர் அனைத்து விஷயங்களுக்கும் தந்தை என்றார்.
ஒவ்வொரு கருத்திற்கும், சக்தி மற்ற சக்திகளோடு மோதுகிறது.
ஒவ்வொரு தனித்த ஜீவியமும் உயிருள்ள ஜீவனும் ஒன்று மற்றதுடன் மோதுகிறது.
தவிர்க்க முடியாத அதன் அறியாமையால் அது இதைச் செய்கிறது.
அது சுதந்திரமாக தன்னை நிலைநிறுத்தி வாழ, வளர மற்றும் தன்னிறைவு அடைய முயல்கிறது.
மற்ற ஜீவராசிகளோடு சுமுகமாக வளர அது முயற்சிப்பதில்லை.
இருந்தாலும் அது மறைவான ஒருமைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
அது சுமுகத்தின் ஏதாவது ஒரு ரூபத்தை நோக்கி நிதானமாக நாம் முன்னேற வற்புறுத்துகிறது.
அது ஒன்றை ஒன்று சார்ந்து வாழும் உடன்பாட்டை முயன்று பெற கட்டாயப்படுத்துகிறது.
கடினமான ஒற்றுமையை முயல வற்புறுத்துகிறது.

There is in us concealed superconscient powers of cosmic Truth and Reality.
Only by their evolution the harmony we strive for can be realized.
They must be dynamically realized in the very fibre of our being.
They must become all its self-expression.
This must be not merely in imperfect attempts.
It must not be incomplete constructions or ever-changing approximations.
The higher ranges of spiritual Mind have to open upon our being and consciousness.
Also that which is beyond even spiritual Mind must appear in us.
This must be done if we are to fulfil the divine possibility of our birth into cosmic existence.

Page 285
Para 14

Overmind in its descent reaches a line.

This line divides the cosmic Truth from the cosmic Ignorance.
It is the line where Consciousness-Force divides Mind.
Consciousness-Force emphasizes the separateness of each independent movement.
The separateness hides or darkens their unity.



பரமாத்மாவின் சக்தியான பிரபஞ்ச உண்மை மற்றும் சத்தியம் நம்முள் மறைந்துள்ளது.
அவை வெளிப்படும்போதுதான் நாம் முயற்சி செய்யும் சுமுகம் நமக்குக் கிட்டும்.
அவற்றை நாம் நம் ஜீவனின் ஒவ்வொரு இழையிலும் சக்திபூர்வமாகப் பெற வேண்டும்.
அதன் பூரண சுய வெளிப்பாடாக அவை மாற வேண்டும்.
அது அரைகுறை முயற்சியால் அடைவதல்ல.
அது முழுமையற்ற அமைப்போ அல்லது மாறும் நிலையுடைய தோராயமான நிலையோ அல்ல.
நம் ஜீவன் மற்றும் ஜீவியத்தில் உயர் நிலைகளுக்குரிய ஆன்மிக மனம் திறக்கப்பட வேண்டும்.
அதைக் கடந்ததும் நமக்குள் வெளிப்பட வேண்டும்.

பிரபஞ்ச வாழ்வில் தெய்வீகம் வெளிப்படும் சாத்தியம் பூரணம் பெற இது நிச்சயம் நடைபெற வேண்டும்.

தெய்வீக மனம் அதன் இறக்கத்தில் ஒரு கோட்டை அடைகிறது.
இக்கோடு பிரபஞ்ச சத்தியத்தை பிரபஞ்ச அறியாமையிலிருந்து பிரிக்கிறது.
சித் சக்தி மனத்தைப் பிரிக்கும் இடத்தில் உள்ளது இது.
சித் சக்தி ஒவ்வொரு தனித்த இயக்கத்தின் பிரிந்த நிலையை வலியுறுத்துகிறது.
அவற்றின் ஐக்கியத்தைப் பிரிவினை மறைக்கிறது அல்லது இருளாக்குகிறது.

Each independent movement has been created by Overmind.
The Force divides Mind by an exclusive concentration from the overmental source.
There has already been a similar separation of Overmind from its supramental source
But it has been done with a transparency in the veil.

That allows a conscious transmission.
It maintains a certain luminous kinship.
But here the veil is opaque.

The transmission of the Overmind motives to the Mind is occult and obscure.
Separated Mind acts as if it were an independent principle.

Each mental being, each basic mental idea stands separately.
Each power and force stands similarly on its separate self.

It can communicate or combine with or contact others.

But it is not with the catholic universality of the Overmind movement.

It is not on a basis of underlying oneness.
It is as independent units joining.
They join to form a separate constructed whole.



ஒவ்வொரு தனித்த இயக்கத்தையும் தெய்வீக மனம் உருவாக்குகிறது.
பிரத்தியேக நிஷ்டையின் மூலம் சக்தி தெய்வீக மனத்திலிருந்து மனத்தைப் பிரிக்கிறது.
இதே போல் சத்திய ஜீவியத்திலிருந்து தெய்வீக மனம் பிரிந்தது.
பிரிந்து திரையிடப்பட்டாலும் ஒளி ஊடுருவும் நிலையில் அது உள்ளது.
அது விழிப்புள்ள சக்திப் பரிமாற்றத்தை அனுமதிக்கிறது.
அது ஒரு வகையான பிரகாசமான உறவைப் பராமரிக்கிறது.
ஆனால் இங்கு திரை ஒளிஊடுருவ முடியாத நிலையில் உள்ளது.
மனம் தெய்வீக மனத்தின் நோக்கங்களை சூட்சுமமாகவும் தெளிவற்றதாகவும் பெறுகின்றது.
தனித்துப் பிரிந்த மனம் தன்னை ஒரு சுதந்திரமான தத்துவமாக எண்ணிச் செயல்படுகிறது.
ஒவ்வொரு மனத்தாலான ஜீவனும், ஒவ்வொரு மனத்தை அடிப்படையாகக் கொண்ட கருத்தும் தனித்து நிற்கிறது.
அதுபோல் ஒவ்வொரு சக்தியும் ஆற்றலும் தன் தனித்த ஜீவனில் நிற்கிறது.
அது பிறவற்றோடு தொடர்பு கொள்ள முடியும் அல்லது கூட்டு சேர முடியும்.
ஆனால் அது தெய்வீக மனத்தின் இயக்கம் போல் ஒருங்கிணைந்து அகண்டு பரந்த நிலையால் ஏற்படுவது அல்ல.
அது அடிப்படையான ஒன்றிய நிலையிலிருந்து எழுவது அல்ல.
அது தனித்த பாகங்கள் சேர்வது போன்றது.
அவை சேர்ந்து வேறான முழுமையை ரூபமாக எழுப்பும்.

It is by this movement that we pass from the cosmic Truth into the cosmic Ignorance.
The cosmic Mind on this level, nodoubt, comprehends its own unity.
But it is not aware of its own source.
Its source and foundation are in the Spirit.
It can only comprehend it by the intelligence.

It cannot comprehend in any enduring experience.
It acts in itself as if by its own right.

It works out what it receives as material.

It does this without direct communication with the source from which it receives it.
Its units also act in ignorance of each other and the cosmic whole.
The exception is for the knowledge that they can get by contact and communication.
There is a basic sense of identity which is no longer there.
The mutual penetration and understanding that comes from this identity is no longer there.
All the actions of this Mind Energy proceed on the opposite basis of the Ignorance.
They are the results of a certain conscious knowledge.
But it is a partial knowledge.
It is not a true and integral self-knowledge.



இவ்வியக்கத்தின் வழியே நாம் பிரபஞ்ச சத்தியத்திலிருந்து பிரபஞ்ச அறியாமைக்கு நகருகிறோம்.
இந்நிலைக்குரிய பிரபஞ்ச மனம் தெளிவாக அதன் ஐக்கியத்தைப் புரிந்து கொள்கிறது.
ஆனால் அதன் மூலத்தை அது அறிவதில்லை.
அதன் மூலமும், அஸ்திவாரமும் ஆன்மாவில் உள்ளன.
அது தன் அறிவால் மட்டுமே அதைப் புரிந்து கொள்ள முடியும்.
அது தன் அனுபவத்தால் அதைப் புரிந்து கொள்ள முடியாது.
அது தன்னுள் தனக்கு உரிமை உள்ளது போல் செயல்படுகிறது.
அதற்கு செய்பொருளாகக் கிடைத்ததைக் கொண்டு அது செயல்முறையை மேற்கொள்கிறது.
அதன் மூலத்தோடு அதற்கு நேரடித் தொடர்பு இல்லை.

அதன் பகுதிகளும் ஒன்றோடொன்றும், பிரபஞ்ச முழுமையிலும் அறியாமையால் செயல்படுகின்றன.
அவைகளுக்குக் கிடைத்த தொடர்பு மற்றும் கருத்துப் பரிமாற்றத்தால் மட்டுமே ஞானத்தை அவை பெற முடியும்
அடிப்படையான ஐக்கிய உணர்வு அங்கில்லை.
ஐக்கியத்தால் எழும் பரஸ்பர ஊடுருவல் மற்றும் உணர்திறன் அங்கில்லை.
மனத்தின் அனைத்து செயல்பாடுகளும் அறியாமையின் எதிர்மறையான அடிப்படையைக் கொண்டு தொடர்கின்றன.
ஒரு வகையான தன்னுணர்வு பெற்ற ஞானத்தின் பலன் அது.
ஆனால் அது பகுதியான ஞானம்.
அது உண்மையான மற்றும் பூரண சுய ஞானம் அல்ல.

Nor is it a true and integral world-knowledge.
This character persists in Life and in subtle Matter.

It reappears in the gross material universe.
That arises from the final lapse into the Inconscience.

Contd...

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அநித்யமான அனைத்தின் பின்னும் நித்யமான ஒன்று உள்ளது என்பதும், அனைத்து ஜீவன்களாகவும், நாமாகவும் இருப்பது பிரம்மமே என்பதும் உபநிஷத உண்மைகள். பகவான் இவற்றின் சாராம்சமாக, புற நிகழ்ச்சிகள் அக உணர்வைப் பிரதிபலிக்கின்றன என்று கூறுகிறார். வெளிச் செயல்பாடு புற நிகழ்ச்சிகள்; மனோபாவம் அகவுணர்வு; உள்ளே இருப்பது அம்சம்; வெளியே இருப்பது செயல். இவை இரண்டும் முரண்படும்; பிளவுபடும். எனினும், சில ஒற்றுமைகளும் உண்டு. இறைவனுக்கு உரியவர் குடும்ப வாழ்வில் அமிழ்வதும், நாத்திகனாகி இறைவனை எதிர்ப்பதும் முரண்பாடு, பிளவின் தோற்றங்கள்.

ஆழ்மனத்தை மேல்மனம் பிரதிபலிப்பது உண்மை (sincerity). இரண்டும் ஒன்றுபோல் அமைவது சுமுகம்; ஆன்ம விழிப்பு. உள்ளும் புறமும் ஒன்று போல் மனம் அமைந்தால் அவன் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வாழ்வான். அவை மாறுபட்டால் பிணக்கு ஏற்படும். மேல்மனத்திற்கு உரிய அகந்தை சுமுகம் வரவிடாது. இரண்டிற்கும் உரிய தன்மைகள் (formations) மறைந்தால்தான் பிணக்கு மறையும்.

பிணக்கின் அறிகுறிகள் வாழ்வில் பலவிதம். கனவுகளும் மேல்மனத்தையோ, ஆழ்மனத்தையோ பிரதிபலிக்கும். “பரோபகாரமும்” பிறர் நலத்திற்கும் ஆன்மிக முன்னேற்றத்திற்கும் தடையாகக் கூடும். அகந்தை, பெருமையுறப் பிறர்க்குத் தர முன்வருகிறது என்கிறார் பகவான். அன்னைக்குச் சேவை செய்ய வந்தவர் உள்மனத்தில் பேராசை இருப்பது உண்டு.

**இப்பிணக்குகள் ஒழிந்த மனமே சுமுகம் உடையது.**



அது உண்மையான மற்றும் பூரண உலக ஞானமும் அல்ல.
இச்சுபாவம் வாழ்விலும் சூட்சுமப் பொருளிலும் தன்னை வலியுறுத்துகிறது.
ஸ்தூல ஜடப் பிரபஞ்சத்தில் மீண்டும் தோன்றுகிறது.
இது ஜட இருளில் தன்னை முழுவதுமாக இழப்பதால் எழுவது.

தொடரும்...

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒவ்வோர் ஆத்மாவும் ஒரு குறிக்கோளை நாடி உலகில் பிறந்துள்ளது. அவரவர் இலட்சியத்தை அவரவர் நாடுவதைப் பிறர் தடை செய்தல் தவறு. 48 நாட்கள் நாட்டு மருந்து உப்பில்லாப் பத்தியத்துடன் சாப்பிடுபவரை, நாம் நம் சந்தோஷத்திற்காக நம் வீட்டில் சாப்பிடும்படி உபசாரம் செய்வது சரியன்று. அவருக்கு அது ஊறு செய்யும். ஒருவர் வலியை அனுபவித்தறியப் பிறந்திருந்தால், அவர் ஆன்மா வலியை அனுபவித்தறிவது ஆத்ம பலனையும், திருப்தியையும் அளிக்கும். அவர் படும் வேதனையை நாம் விலக்க முனைவது அவரது ஆன்மிக முன்னேற்றத்திற்குத் தடையை ஏற்படுத்துவதாகும். இந்த நோக்கில் பகவான் எழுதியுள்ளது,

**ஒருவர் வேதனையை நாம் விலக்குவதால் அவர் உடலுக்கோ, மனத்திற்கோ, ஆன்மாவிற்கோ, நமக்கோ பலன் தராது.**

இதுவே தத்துவமானால் நாம் பிறருக்கு உதவுவது சுயநலம் என்கிறார் பகவான். நம் அகந்தை தான் பெருமையுறப் பிறர்க்கு உதவ முன் வருகிறது என்கிறார். பிறருக்கு நல்லது செய்யும் நல்ல நோக்கமும், அகந்தையை வளர்க்கும் தவறான நோக்கம், எண்ணம் ஆகியவற்றின் வெளிப்பாடாகவும் அமையும்.

சோகமே உருவானவர்கள் உண்டு. இவர்களைச் சோகத்திலிருந்து மீட்கச் செய்யும் முயற்சிகள் முழுத் தோல்வியை அடையும். அப்படிப்பட்டவர்கள் அன்னையை நாடி வந்தால் பெரும்பாலோர் சோகத்தை இழந்து விடுகிறார்கள். ஒரு சிலருக்குச் சோகம் போவதில்லை. அப்படிப்பட்டவர்களைப் பற்றி அன்னை கூறியது.

**இங்கு வந்து ஒருவருக்குச் சோகம் அழியவில்லை எனில் அவர் சோகம் அழியாது.**

## இம்மாதச் செய்தி

# அறிவின் சொரணை ஆத்ம பக்குவம்.



## சாவித்ரி

**Page 177: As if in her ascent to her lost source**
***இழந்த இலக்கை நாடி உயர்பவர் போல***

- ✡ இருப்பதெல்லாம் எடுத்துரைக்க விழைபவர் போல
- ✡ அவள் உயர்ந்த ஊர்வலம் கட்டம் கட்டமாக வளர்ந்து
- ✡ பார்வை திருஷ்டியாகும் பக்குவம் தரும் முன்னேற்றம்
- ✡ ரூபம் ரூபலாவண்யமாகும் நேர்த்தியான முன்னேற்றம்
- ✡ அளவுகடந்த அபரிமிதமான பிரயாணிகளின் யாத்திரை
- ✡ அளவை மீறிய எண்ணம், கட்டுக்கடங்காத சக்தி
- ✡ மடியிலிருந்த மகத்தான சக்தி காலத்தால் கட்டுப்படாதது
- ✡ ஆதியற்ற மௌனம் அந்தமற்ற அமைதியாகி
- ✡ ஆத்மாவின் அழியாத ஆனந்தத்தினின்று பிரிக்கப்பட்டு
- ✡ தானிழந்த சந்தோஷத்தையெல்லாம் தக்கவைக்க முயன்று
- ✡ அழியும் பொருளுக்கு அழியாரூபம் கொடுத்து
- ✡ சிருஷ்டிக்கும் செயலின் பிரம்ம சக்தியை நம்பி
- ✡ நிரப்பமுடியாத பிளவைத் தாண்டி வென்று
- ✡ பிரிவினையின் புண்ணைச் சற்று குணப்படுத்தி
- ✡ சிறுமையின் சிறையினின்று தப்பி ஓடி
- ✡ பிரம்மத்தின் பரந்த உயர்வுகளைக் கண்டு
- ✡ காலத்தின் அரங்கம் கட்டவிழும் நிலையற்ற நிழலில்
- ✡ அணுகமுடியாத அற்புதம் அருகே வந்து தவழ்ந்து
- ✡ பிரம்மாண்டமான காலம் நொடியினுள் சிக்கி
- ✡ சிறிய ஆத்மாவைப் பிரம்மத்தால் நிரப்புகிறது.

✡ அசைவற்றது அவள் மந்திர இசைக் குரலால் வளைந்து

✡ அகன்ற கரையின் அளவற்ற நீட்சியில் நின்று

✡ ரூபத்துள் உறையும் அரூபியைக் கண்டு

✡ அனந்தத்தின் அரவணைப்பை அருகேயுணர்ந்து

✡ சேவைக்கு இலட்சியமில்லை, கடமைக்கு முடிவில்லை

✡ பரமனின் திருவுள்ளம் பாட்டை உயர்த்தி நடத்தி

✡ அறிய முடியாத ரூபமற்ற பரப்பு அளிக்கும்

✡ இது அவள் இரகஸ்யம், முடியாத கடமை

✡ எல்லையற்றதை பிறப்பெனும் சிறுவலையில் பிடிக்க முயன்று

✡ ஆன்மாவை உடலின் ரூபத்துள் அடக்க முயன்று

✡ சொற்பதம் கடந்தவனை சொல்லால் வர்ணிக்க முயன்ற எண்ணம்

✡ வெளிப்படாத இரகஸ்யத்தை வெளிப்படுத்த பாடுபட்டு

✡ முடியாதது அவள் முயற்சியால் முடிந்தது

✡ உயர்ந்த அறிவுக்குப் பொருத்தமற்ற திட்டத்தை ஏற்று

✡ அந்த மந்திர மாயக் கலையின் தந்திரங்களைக் கண்டு

## ஜீவிய மணி

*அன்னையின் ஜீவியம் சிருஷ்டிக்கவல்லது. அது சிருஷ்டிக்கக் கூடியவற்றுள் ஒன்று, அன்னையின் ஜீவியமாகும். அதாவது தன்னைத்தான் பெருக்கிக் கொள்ளக் கூடியது. உளி மேஜையைச் செய்யும். பேனா எழுதும். ஆனால் உளியால் உளியைச் செய்யவோ, பேனாவால் பேனாவைச் செய்யவோ முடியாது. அன்னை ஜீவியம் உலகில் எதையும் சிருஷ்டிக்க வல்லது. அத்துடன் தன்னையும் சிருஷ்டிக்கக் கூடியது.*

*அதனால் அன்னை ஜீவியம் அனந்தமாகும்* **(Infinity).**





## 22/24. நெருங்கி வந்து இணைந்து இழைந்து விலகி நிற்றல்; நெருக்கமாக விலகுதல்

- நெருக்கம் தீவிரம் தரும். இணைந்தால் தீவிரம் அதிகமாகும். இழைவது இணைவதை முழுமைப்படுத்தும். விலகினால் இவையனைத்தும் குறையும், குறையாமல் விலக முடியாது.
- பிரம்மம் மூலம், அதற்குத் தீவிரம் உண்டு.
- இணைந்து இழைவது நெருக்கத்தை மூலமான சாரமாக்கி விடும்.
- *மூலத்தில் சாரம் தீவிரமானால், அதன் பிறகு விலகினாலும் விடுபடாது.*
- அப்படி விலகுவது சாரத்தை பெரிய அளவில் செயல்படச் செய்யும்.
- விலகுவதால் தீவிரம் குறைந்து, மறந்து, மறைந்து போவதாகத் தெரியும்.
- *குறைவதும், மறைவதும் மேல் மனத்தில், தீவிரம் அதிகமாகி நினைவு நிரந்தரமாவது ஆழ்மனத்தில்.*
- நேரம் வரும் பொழுது அந்த நினைவு மட்டும் மேலெழும்.
- **P.V.G.** ராஜு 50-தில் ஆந்திரா மந்திரி. அன்னையை தரிசனம் செய்தவர். அடிக்கடி இங்கு வருவதில்லை.
- பஞ்சாப்பில் விபத்தில் சிக்கி ஸ்மரணை இழந்தார். இழந்த நிலையில் ஓர் ஆண்டிற்கு மேலிருந்தார்.
- நினைவு வரவில்லை. ஏதோ ஒரு சமயம் நினைவு வந்தால் எவரும் நினைவில் தோன்றுவதில்லை.

  *பகவான் அன்னை படங்களைக் கண்டு கொள்வார்.*
- கணவன் மனைவி பிரிவதுண்டு. நாளுக்கு நாள் விலக்கு வளரும். நினைவிலும் இருப்பதில்லை.

- அவர் வாழ்வில் வரும் முதலாளி, நண்பர், கூட்டாளி, தலைவர் என எழுபவர்கள் பெயர் ஏதோ ஒரு வகையில் மனைவியின் பெயர், ஊருடன் தொடர்புள்ளவர், ஏதோ ஒரு வகையில் வந்தபடியிருக்கும். இவ்வாழ்வுக்குரிய சட்டங்கள் ஏராளம்.

*மேல் மனம் இழந்தது ஆழ்மனத் தீவிரமாகும்.*

- தன்னை மறந்தவரை மறவாத நினைவு அன்னை நினைவு.
- ஜப்பானிலிருந்தபொழுது விஷ ஜுரம் அன்னையைத் தீண்டியது ஜப்பானை விட்டு விலகியது.
- *அணுகுண்டு நெடுநாள் கழித்து ஜப்பானில் சேதம் விளைவித்தது அழிந்த விஷ ஜுரத்தின் அழிந்த சுவடு.*
- திருடன் விலகியவனுடைய தீவிர நெருக்கத்தை இரகஸ்யமாக வலியுறுத்தத் திருடுகிறான்.
- *விலகியவன் தூர இருந்து தொடர்பு கொள்ள எதிரான உறவை ஏற்படுத்துகிறான்.*
- சாக்கிய முனி தூர இருந்து உறவை நிலைநிறுத்த கல்லால் அர்ச்சனை செய்தார்.
- இந்தியா சுதந்திரம், சுபிட்சம், ஞானம், நேர்மை, நாணயம், இவற்றை இழந்தது இவற்றை அடுத்த கட்ட உயர்வாகப் பெறுவதற்காக என்பது ஒரு அடிப்படை வாழ்க்கைத் தத்துவம்.
- *இழப்பது வாழ்வுக்குரியதல்ல. நாள் கடந்தால் அதிக நஷ்டம் ஏற்படுவது ஆழத்தில் அதிக இலாபம் பெறுவதாகும்.*
- நண்பன் எதிரியானால், நட்பும் உறவும், நாலா பக்கங்களிலும் வளர்வதாகும்.
- *அவமானம் அகிலம் சூட்சுமமாக அறியும் ஆன்மிக மானம்.*
- நெருக்கம் என தலைப்பு கூறுவது உடலிலிருந்து பூரண ஜீவன்வரை எல்லா நிலைகளிலும் உண்டு.
- ஒவ்வொரு நெருக்கத்திற்கும் உரிய செல்வம், பிரபலம், அதிகார நிலைகள் உண்டு. அதற்கு இருபுறமும் - நல்லது கெட்டதென - உள்ள பலன்கள் உண்டு.



- *ஒரு மனிதன் உச்சகட்டத்தில் உயர்வான நிலையில் உலகத்திற்கே சேவை செய்யும் சிறந்த பவர் உண்டு.*
- கணவனுக்கு உடலாலும், உயிராலும், மனதாலும், ஆத்மாவாலும் உண்மையானவள் அவனுக்கு மாங்கல்ய பலம் தருகிறாள்.
- அவளே சமைத்து, அவளே பரிமாறும் உணவு அவனுக்கு எந்த வியாதியையும் குணப்படுத்தும்.
- வெட்டுக்காயம் சாப்பிட்டு முடிந்தவுடன் தானே வாய் மூடி குணமாகும்.
- இந்த ஞானம் எல்லோர்க்கும் உண்டு, கனவில் தெரியும்.
- திருமணமான மனைவியின் விஸ்வாசம் திருமணமாகாத-வர்க்கு வராது.
- *உயர்ந்த உள்ளம் ஆத்ம வளர்ச்சியால் பெற்றவர்க்கு சேர்ந்த-வளுக்குள்ள உச்சகட்ட விஸ்வாசம் திருமணமானவர்க்கு வராது.*
- **உலகில் எந்தக் காரியத்தையும் எந்தக் காரியத்தாலும் செய்ய முடியும்.**
- **(Integrality)** புறத்தில் இணைந்த நிலையும், அகத்தில் இழைந்த உணர்வும் பெற்றவர்க்கு அது முடியும்.
- அது மனத்தால் செயல்பட முயற்சி எண்ணமாக எழ வேண்டும்.
- செயலால் அது நிறைவேற உரிய செயல் உருவாக வேண்டும்.
- *கிருஷ்ணன் சாப்பிட்ட ஒரு சாதப் பருக்கை கருவியாகும்.*
- நரபலி, காவு, தீ மிதி அப்படி ஏற்பட்ட அற்புதமாகும்.
- காளிதாசன் பெற்ற ஞானம் இம்முறையால் ஏற்பட்டதே.
- *வில்வம் தங்கமாவது, கனகதாரா இச்சட்டங்களைக் கூறும்.*
- சேற்றில் தாமரை எழுவது இச்சட்டத்தின் முறையாகும்.

## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 117. தீர்க்க முயன்ற பிரச்சனை ஏற்கனவே தீர்ந்திருப்பதைக் கண்டவர் நிற்பது பூரண யோக வாயில்.

- போலீஸ் ஸ்டேஷனில் திருடு போகாது.
- காவிரிக்கரையில் தண்ணீர்ப் பஞ்சமில்லை.
- கம்பன் வீட்டில் கட்டுத் தறியும் கவிபாடும்.
- *அன்னை சூழலில் பிரச்சனைக்கு உயிர் இருக்காது.*
- அன்பர்கள் "பிரச்சனை" என்பது அவர்களை நோக்கி வரும் வாய்ப்பு. அவர் கண்ணுக்குப் "பிரச்சனை" யாகத் தெரிவது.
- அதைத் தீர்க்க முயன்றால் அது ஏற்கனவே தீர்ந்து விட்டது தெரியும்.
- மேலும் தொடர்ந்து கவனித்தால் அதனுள் உள்ள வாய்ப்பு தெரியும்.
- *வாய்ப்பைப் பணமாக, உதவியாக, முன்னேறும் வழியாகக் காண்பார்கள்.*

  அது பணமில்லை. தொடர்ந்து பணம் உற்பத்தியாகும் ஊற்று எனத் தெரியும்.

  அது உதவி மட்டுமல்ல, உதவிக்கு உறைவிடம் எனப் புரியும்.

  அது முன்னேறும் வழியில்லை, *அதனுள் ஆயிரம் முன்னேற்ற-முண்டு எனத் தெரியும்.*

  அது யோக வாயில்.

  அது அனைவரும் அதிர்ஷ்டம் பெறும் ஆனந்தம்.

  அது நம்மையறியாமல் நமக்குப் புது *ஜாதகம்* எழுதிய கையாகும்.

  அது புது உலகைச் சமைத்து அங்கு நமக்கு உரிமை வழங்குவதாகும்.



- பிரச்சனையைத் தீர்க்க அன்னை பிரார்த்தனையை எதிர்பார்ப்பதில்லை.
- அன்பருக்குப் பிரச்சனை என்றவுடன் அன்னையிடம் அது போக முயலும்.

  அன்னையைப் பிரச்சனை எட்டுமுன் அது அவர் சூழலைத் தீண்டும்.
- சூழலுக்கு ஜீவன் உண்டு.
- சூழல் பிரச்சனையைப் பெற்று எதிரான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும்.
- *சூழலே பிரச்சனையை அழித்து விடும்.*
- ஏற்பட்ட பிரச்சனைக்குக் கர்மத்தில் வேரிருக்கலாம்.
- அப்படியிருந்தால் அன்பர் அன்னையை அழைத்தவுடன் வேர் அறுபடும்.
- வேர் அறுபட்டபின் ஜீவனற்ற பிரச்சனை வெட்டப்பட்ட மரமாக அவர் கண்முன் நிற்கும்.
- அன்பரே முனைந்து மரத்தை அப்புறப்படுத்துவது போல் எஞ்சிய பிரச்சனையின் உருவை விலக்க வேண்டும்.
- பிரச்சனையை விலக்க சட்டமில்லாவிட்டால் சூழல் சட்டம் இயற்றும்.
- உள்ள சட்டம் சாதகமானாலும் தேவையான 'சாட்சியம்' இல்லாவிட்டால் சூழல் அற்புதமாக டாக்குமெண்ட், சந்தர்ப்பம், சாட்சியை அளிக்கும்.
- அன்பர் என்பதற்கு விளக்கம் பிரச்சனையற்ற வாழ்வுடை-யவர்.
- அவருக்குப் பிரச்சனைகளில்லை.
- இருந்தால் அவர் முனையுமுன் அவை தீரும்.

## அஜெண்டா

**(that) - *அனைத்தும் ஆதிமுதலுள்ளவை.***

**(That) பிரபஞ்சம் ஒவ்வொரு நிமிஷமும் கரைந்து மீண்டும் *சிருஷ்டிக்கப்படுகிறது.***

Volume 8, page 36

- பெரும் பாடகர்கள், ஒலிம்பிக்கில் விளையாடுபவர், பார்லிமெண்டில் நெருக்கடியான நேரம் எதிர்கட்சியை மறுத்துப் பேசும் அரசியல்வாதி, உண்மை மட்டும் பேசும் உழைப்பாளி, மாமியார் கொடுமையை *மனம் விரும்பி கட்டுப்பாடாக ஏற்கும் இளம் மனைவி*, துரோகம் செய்யும் மானேஜரிடம் விபரம் தெரிந்து பெட்டிச் சாவியைக் கொடுத்தவர் இழக்க விரும்பாத பொறுமை, லஞ்ச ஊழல் நிறைந்த ஆபீஸில் அன்று மாலையே லைசென்ஸ் பெறாவிட்டால் அனைத்தும் போகும் என்ற கட்டத்தில் லஞ்சம் கொடுக்க மறுக்கும் வியாபாரி, அறிவில்லாத குருவின் அறிவுள்ள சிஷ்யன், ஊருக்குப் பெரியவன் உரிமையை எடுக்கக் கங்கணம் கட்டிக் கொண்ட பொழுது திணறும் எளியவன், தாயே மகள் விதவையாக நினைக்கும் சுமங்கலி, எவருக்கு மனமார பெரு நஷ்டப்பட்டு உதவினாரோ அவர் குதர்க்கமாக கர்வமாக உன்னை அழித்து வேடிக்கைப் பார்ப்பேன் என்ற நிலையை எதிர்கொள்ளும் மனிதன் போன்றவர்க்கு “அவர் உலகம் ஒவ்வொரு நிமிஷமும் கரைந்து மீண்டும் புதுப்பிக்கப்படுவது” தெரியும்.

- கடவுள் பக்தியுள்ளவர் கடவுளுக்குப் பயந்து நடப்பார். அவர் பிரார்த்தனைகள் பலிக்கும். ஜாதகப்படி வாழ்வு ஓடும். அவருக்கு ஆண்டவன் “அவர் ஜாதகத்திற்குட்பட்டு” எந்தக் குறையும் வைப்பதில்லை. *பெரும் நேரங்களில் பக்தியின் உயர்வால் ஜாதகப்படி உள்ள கண்டமும் சற்று விலகி வழிவிடும்.* இவருக்கு “அனைத்தும் கடவுளில் உள்ளது” என்ற விளக்கம் பொருந்தும். இது மத வழிபாட்டின் சிறந்த உயர்வு. தவம் இதைக் கடந்தது.

- தவத்தை மேற்கொண்டவர் ஜாதகத்தை பார்க்கும் அதிகாரம் ஜோஸ்யனுக்கில்லை.
  *அவனுக்கு ஜோஸ்யன் எழுதிய ஜாதகம் கிடையாது.*
  தவத்தை ஏற்ற தவசிரேஷ்டருக்கு தவம் ஏற்படுத்திய நியதிகள் உண்டு.
  அதுபோன்ற ரிஷியின் தபோ வலிமையை அழிக்க வந்த அப்சரஸைக் கண்டு 900 ஆண்டு தவத்தை மறந்தவர் “*பாசம், பிரியம், மையல் என்ற நியதிக்குட்பட்டவர்.*” இது **“that”**.

- பூரண யோகம் **“That”**.
  எந்த நிலையிலும் அந்த நிலைக்குரிய பெருமையும் உயர்வும் மட்டும் பெறும் அன்பர் **“that”** என்ற உலக தவ நிலையைக் கடந்து **“That”** என்ற பெரிய நிலையை அடைகிறார். அவரை **“That”** தேடி வருகிறது.

- **Pride and Prejudice** 200 ஆண்டிற்குமுன் எழுதிய ஆங்கிலக் கதை. இங்கும் பிரெஞ்சுப் புரட்சி அலையாக வருவதை அது எலிசபெத் வாழ்வில் வந்து மிளிர்வதைக் காண்கிறோம். கதைக் கோப்புக்குட்பட்டு **“that”** மாறி **“That”** ஆவதைக் காண்கிறோம்.

- **“that”** வாழ்வின் ஆன்மிக நெறி. **“That”** தெய்வீக வாழ்வுக்குரியது.

### ஸ்ரீ அரவிந்த சுடர்

விஞ்ஞானி சக்தியை ஆராய்ந்து அது ஜடம் எனக் கண்டான். வேதாந்தம் சக்தியை ஜீவனிலிருந்து பிரித்து ஜடமாகக் காண்கிறது. பாதை வேறானாலும் இருவருக்கும் முடிவு ஒன்றே. ஸ்ரீ அரவிந்தம் உலகிலும், பிரபஞ்சத்திலும், சிருஷ்டியிலும் உள்ள அனைத்தும் ஜீவனுள்ளவையே எனக் கொள்கிறது.

# வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

11. வாழ்க்கைத் தரும் சிரமங்களையும், சவால்களையும் கண்டு மிரளக் கூடாது. தைரியமாக நாம் அவற்றை எதிர் கொள்ள வேண்டும். வாழ்க்கை தரும் சவால்களை நாம் மகிழ்ச்சியோடு எதிர் கொண்டோம் என்றால் பெரிய வெல்ல முடியாத சிரமமாகப்பட்டது நம் கட்டுப்பாட்டிற்குள் வருவதைக் காணலாம்.

- வாழ்க்கை பொதுவானது. அனைவருக்கும் சமமான வாய்ப்பையே தருகிறது. பெறுபவர் தம் குணவிசேஷத்தால் பெரிய பலனையும், சிறிய பலனையும் பெறுகிறார்கள்.
- சிரமம், எதிர்ப்பு, தடை, சவால், ஆபத்து, களேபரம் என்பவை வாழ்வின் வண்ணங்கள். அதைக் கண்டவுடன் பின்வாங்குபவர்கள் அநேகர். ஓரிருவரே எதிர்த்து நின்று சமாளிப்பார்கள்.
- எதிர்ப்பால் விலகுபவரைவிட ஆசைப்பட்டு தடம்மாறி படுகுழியில் விழுபவர் அநேகம்.
- மாமியார் வக்கிரம். ஒரு மருமகள் வக்கிரத்திற்கு சமமான வக்கிரம். அனைத்தையும் இழந்தார். அடுத்த மருமகள் மாமியார் எப்படியிருந்தாலும் நானிருக்க வேண்டியபடி நானிருக்கிறேன் என்றார். முழுப் பொறுப்பும் அவள் கைக்கு வந்து விட்டது.
- சர்வதேச ஸ்தாபனம் வெறும் ஜீவனற்றதாயிற்று. ஆனால் பிரபலம் உண்டு. தலைவர், தலைவர் என்ற பிரபலத்தை 8 ஆண்டுகள் அனுபவித்து, அதற்குரியவாறு சட்டங்களை மாற்றி அமைத்தார். அடுத்தவர் வந்தார். சட்டங்களை சாதகமாக்கி எதேச்சதிகாரம் செய்து நன்கொடை கொடுத்த ஒருவரை எதிர்த்தார். நன்கொடை கொடுத்தவர் மட்டும் வேலை செய்பவர். விஷயம் தெரிந்தவர். தலைவர் அவரை விலக்க உத்தரவிட்டார். எதேச்சதிகாரம் பூரணமாயிற்று. பலியானவர் எதிர்ப்பதில்லை, **non-reaction** என முடிவு செய்தார். பதிலும் கூறவில்லை. அவதூறுகளை ஏற்றுக் கொண்டார். ஸ்தாபனம் உயிர் பெற்றது. செயல்பட்டது. எல்லாக் காரியங்களையும் புது முறையில் அமைத்தனர். எதேச்சதிகாரம் செய்தவர் எல்லாப் பணத்தையும் எடுத்துக் கொண்டு போய்விட்டார். எடுத்த முடிவுகள் போதாது என கோர்ட்டிற்குப் போய் தனக்கு வேண்டாதவர்களை விலக்க கேஸ் போட்டார். கோர்ட் மத்தியஸ்தம் செய்ய ஆர்டர் போட்டது. தலைவர் சமரசத்தை மறுத்தார். அப்பீலுக்குப் போனார். மேல் கோர்ட்டும் சமரசத்தை சிபாரிசு செய்தது. வருஷம் ஓராண்டாயிற்று. 20 இலட்சம் ஸ்தாபனப் பணம் கோர்ட் செலவாயிற்று.

  பலியானவர் பேசாமலிருந்தார். உயிர் பெற்ற ஸ்தாபனம் பலியானவர் சேவையை ஏற்றது. பதவியின்றி சேவை செய்தார் அவர். சிறு செலவுகட்கு கைப்பணத்தைப் போட்டு செலவு செய்தார். ஜெனரல்பாடி கூடியது. தலைவரை விலக்கியது. பணத்தை எல்லாம் திருப்பித்தர உத்தரவு வழங்கியது. புதிய நிர்வாகிகளை ஏற்படுத்தியது. சேவை செய்தவரை அவர்களும் பொருட்படுத்தவில்லை. அவர் தன் செலவில் சேவையைத் தொடர்ந்தார். அவர் பங்கு இது சிறு செலவு பெரிய சேவை. அடுத்த பெரிய ஸ்தாபனம் அவரை நாடியது. ஐரோப்பிய பத்திரிக்கை ஒன்று அவர் சேவையை நாடியது. புதிய கருத்துகளைப் பலியானவர் எழுதினார். **European Union** தலைவரை அவ்விஷயமாக சந்திக்க முடிந்தது. 100 டைரக்டர்களைச் சந்தித்துப் பேச முடிந்தது. ஒரு பெரிய **genius** இவரை நாடி வந்தார். அவர் அந்தப் பத்திரிக்கையின் உரிமையாளர். பலியானவரை அப்பத்திரிக்கையை நடத்தச் சொன்னார். குறுகிய காலத்தில் பத்திரிக்கை முக்கியம் பெற்றது. சர்வதேச நிலைமை மாறியது. புது ஸ்தாபன அமைப்பில் இவரைத் தலைவராக **(CEO)** அழைத்தனர். 20 ஆண்டுகளில் 4 மகா நாட்டிற்குப் போனவர் 8 மாதத்தில் 7 மகா நாட்டிற்கு அழைப்புப் பெற்றார்.

  பழைய தலைவர் கேஸை வாபஸ் செய்தார். ராஜினாமா செய்வதாகக் கூறினார். அவரும் அவரைச் சார்ந்தவர்களும்

இருக்குமிடம் தெரியவில்லை. புதிய அமைப்பு பல்வேறு புதுவேலைகளைச் செய்தது. கடந்த 30 ஆண்டில் நடக்காதவை கடந்த 14 மாதத்தில் நடந்தன. செலவுக்கு வேண்டிய பணம் பழைய தலைவரிடம் உள்ளது.

இவ்வளவு புது வேலைகளும் பலியானவர் செய்ய மற்ற ஸ்தாபனங்கள் செலவு கொடுத்து சன்மானம் கொடுத்து நடத்தச் சொல்லி வேண்டினர். எதிர்ப்பெல்லாம் சாதகமாக மாறியது. புதிய அமைப்பில் உள்ள ஸ்தாபனம் உலகத் தலைமையை நோக்கி உருவாகுகிறது.

- எதிர்ப்பு ஏற்றம் மிகு எதிர்காலத்தைக் காட்டும்.
- சிறிய புத்தியுள்ள சிறுமதியுடையவனுக்கு அழிவுகாலம் வந்தால் நல்லவனை அழிக்கக் கங்கணம் கட்டிச் செயல்படுவான்.
- பரிசு பெற பக்குவம் வேண்டும்.

(தொடரும்)

### ஸ்ரீ அரவிந்த சுடர்

500 ஆண்டுகட்கு முன் கிருஸ்த்துவ சர்ச்சின் மூடநம்பிக்கையை அழிக்க விஞ்ஞானம் உருவாயிற்று. அதன் விளைவாக Protestant மதம் ஏற்பட்டது. **வேதம் கண்ட ஞானத்தையோ, வேதாந்தம் கண்ட பகுத்தறிவையோ விஞ்ஞானம் இன்றுவரை அறியவில்லை.** இந்திய சுதந்திரம் அரசியல் தலைவர்களால் இன்று பெரும் செல்வம் பெறும் அரங்கமாகச் செயல்படுகிறது. எந்த ஒரு பெரு இயக்கமும் தன் இலட்சியத்தை இழப்பதுண்டு. நாளடைவில் எதிரான இலட்சியத்தின் கருவியாவதும் உண்டு. உலகம் பன்முறை பெற்ற அனுபவம் இது. அகிம்சையை ஆத்ம ஞானமாகக் கொண்ட மகாத்மாஜீ எவரும் அறியாமல் வன்முறையை வளர்க்கும் பாதையாக அது மாறியதைக் கண்டார். **உலகுக்கு அறிவித்தார்.** அவரே அதற்குப் பலியானார். விஞ்ஞானம் இன்று பகுத்தறிவின் முதல் எதிரியாக போர் தொடுக்கிறது.



# தனித்தன்மையும் அதற்குரிய அடையாளங்களும்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

மூலம்: ஸ்ரீ கர்மயோகி

விரிவாக்கம் & சொற்பொழிவு ஆற்றியவர்: திரு. N. அசோகன்

சொற்பொழிவு ஆற்றிய தேதி: 24.04.2015

தனித்தன்மையை நிரூபிக்க original-லாக நாம் சிந்திக்க வேண்டும் என்ற அவசியமில்லை. எல்லோருக்கும் தெரிந்த பல விஷயங்களை எவரும் முன்வந்து செய்வதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் நல்ல விஷயத்தை நாம் ஏன் செய்யக்கூடாது என்று முனைந்து செயல்வடிவம் கொடுப்பவர்கள் அந்த வகையில் originality உள்ளவர்களாகக் கொள்ளப்படுவார்கள். அந்நியனான வெள்ளையன் நம்மை ஆட்சி செய்வது தவறு. அவனிடமிருந்து விடுதலை பெறுவது நாட்டிற்கு நல்லது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். ஆனால் எவருக்கும் வாய்விட்டு அதை உரிமையுடன் கேட்க தைரியமில்லை. அப்படி வாய்விட்டு தைரியமாகக் கேட்டவர் காந்திஜி ஒருவர் மட்டும்தான். சரி கேட்டுவிட்டோம் அதை எப்படி செயல்படுத்துவது என்ற அடுத்த கேள்வி வருகிறது. அதற்கும் சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை இயக்கம் என்று செயல்வடிவம் கொடுத்தார். அம்மாதிரியே சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து 1960 வரை நாட்டில் உணவுப் பற்றாக்குறை இருந்தது. அதன் விளைவாக பஞ்சமும், பட்டினியும் மக்கள் அனுபவித்தார்கள். ஜனத்தொகை பெருகிவரும் காலத்தில் நாளாக நாளாக இந்தப் பஞ்சமும், பட்டினியும் அதிகமாகும் என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். இருந்தாலும் மேலை நாடுகளிலிருந்து கோதுமை, அரிசி போன்ற தானியங்களை இறக்குமதி செய்து சமாளித்துக் கொள்ளலாம் என்றுதான் ஆட்சிப் பொறுப்பிலிருந்தவர்கள் நினைத்தார்களே தவிர நம் நாட்டிலேயே பற்றாக்குறையாக இருக்கும் உணவை உற்பத்தி செய்து கொள்ளலாம், மேலை நாட்டு அரசிடம் கையேந்தத் தேவையில்லை என்று முதன்முதலில் வெளிப்படையாகப் பேசியவர் காலஞ்சென்ற மத்திய உணவு அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள்தான்.

அதாவது அவருடைய **originality** மேலை நாடுகளுடைய தயவை எதிர்பார்க்காமல் நம் சொந்தக் காலிலேயே நிற்போம் என்று பேசியதில்தான் இருக்கிறது. அந்த விஷயத்தில் அவர் முன்னோடியாகச் செயல்பட்டார். அவர் சொல்லியதுடன் நிறுத்திக் கொள்ளாமல் அதைச் செயல்படுத்தியும் காட்டினார். அதாவது பசுமைப் புரட்சி என்ற ஒரு இயக்கத்தை ஆரம்பித்து இயக்கத்திற்கு ஆதரவாக உயர்ரக தானிய விதைகள், உரமூட்டைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள், புதியதாக உற்பத்தியாகும் தானிய மூட்டைகளைச் சேகரித்து வைத்துக் கொள்ளத் தேவையான உணவுக் கிடங்குகள், மூட்டைகளை எல்லா இடத்திற்கும் கொண்டு செல்லத் தேவையான லாரிகள், **minimum floor price** என்று எல்லாவற்றையும் கொண்டுவந்து பசுமைப் புரட்சி வெறும் பேச்சில்லை நிஜம் என்று அவர் மாற்றிக் காட்டினார். மறைந்த தலைவர் காமராஜர் அவர்களும் அப்படி முன்னேற்றத்திற்கு செயல்வடிவம் கொடுப்பதில் மிகுந்த **originality** உள்ளவர். இந்திய மக்கள் முன்னேற எது உதவியாக இருக்கும் என்று நாட்டின் தலைமை விவாதம் செய்து கொண்டிருந்தபோது அவரவருக்குத் தேவையான கல்வியறிவைக் கொடுத்துவிட்டால், அவரவரும் தன்னைத்-தானே முன்னேற்றிக் கொள்வார்கள் என்று அவரொரு யோசனை வழங்கினார். பள்ளிக்குப் பிள்ளைகள் ஒழுங்காக வருவ-தில்லையே அதற்கு என்ன செய்வது என்று அடுத்த கேள்வி எழுந்தபோது, மதிய உணவு பள்ளியில் வழங்கிவிட்டால் பிள்ளைகள் தவறாமல் வருவார்கள் என்று சொல்லி மதிய உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தவர் அவர்தான். இம்மாதிரி செய்ய வேண்டிய காரியங்களை முன்வந்து தைரியமாக அமல்படுத்துபவர்கள் அந்த வகையில் **originality** உள்ளவர்கள் என்று சொல்லவேண்டும். அப்படிப் பார்த்தால், பென்ஷன் வாங்கும் அரசு ஊழியர்கள் காலமாகும்போது அந்தப் பென்ஷன் நிறுத்தப்பட்டு வந்தது. பென்ஷன் நிறுத்தப்படுவது காலஞ்சென்றவரின் குடும்பத்தினரை மிகவும் சங்கடத்திற்கு ஆளாக்கியது. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாக இருந்தாலும் எவரும் எதுவும் செய்யவில்லை. தி.மு.க. தலைவர் கருணாநிதி அவர்கள் இப்படி விதவையாகிப் போகும் பெண்கள்



படும் கஷ்டத்தை உணர்ந்து, அரசு ஊழியர் காலமானாலும், அவருக்குக் கொடுக்கப்பட்ட பென்ஷன் அவருடைய மனைவி-யாகிய விதவைக்கும் வழங்கப்பட வேண்டும் என்றவொரு சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்தார். அம்மாதிரியே ரயில்வே துறையும் அரசைச் சேர்ந்ததாக இருந்தாலும், அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பென்ஷன் ஏதோவொரு காரணத்தால் ரயில்வே ஊழியர்களுக்குக் கிடைக்காமல் இருந்து வந்தது. இதற்காக சிலபேர் சட்டத்திருத்தம் கொண்டுவர முயற்சி செய்தபோது, அது நடைமுறைக்குவர இருபது வருடங்களுக்கு மேல் ஆகியது.

ஏற்கனவே அமலிலுள்ள சர்க்கார் பென்ஷனை ரயில்வே துறைக்கும் நீட்டிக்க முடிந்ததை ரயில்வே துறையில் நிகழ்த்திய ஒரிஜினல் சாதனையாகத்தான் நாம் நினைக்க வேண்டும். நம் நாட்டில் எல்லோருக்கும் தெரிந்த விஷயமாக இருந்தாலும் எவரும் எடுத்துச் செய்ய முன்வருவதில்லை. அப்படி ஒருவர் எடுத்துச் செய்தால் அவரை ஏதோ ஒரு அதிசயப் பிறவிபோல் பார்க்கின்றனர். உதாரணமாக இந்தியா சுத்தமாக இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த செய்தி. வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் விமான நிலையத்தைவிட்டு வெளியேறி டாக்ஸி பிடித்து வரும்போதே நம் நாட்டு நெடுஞ்சாலைகள் சுத்தமாக இல்லை என்று உடனே சொல்லிவிடுகிறார்கள். இதைச் சொல்லாத வெளிநாட்டுப் பயணியே இல்லை. சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இது நம் காதில் விழுந்தாலும், எந்த ஆட்சியும் இதுவரையில் எதையும் செய்ததில்லை. தற்போதையப் பிரதமர் திரு. மோடி அவர்கள்தான் 'ஸ்வச்ச பாரத்' கிளீன் இந்தியா என்ற சுத்தப்படுத்தும் இயக்கத்தைத் தொடங்கி வைத்துள்ளார். இந்த ஒரு செயலுக்காக அவருக்கு பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளன.

**Originality**-ஐ நாம் அறிவின் செயல்பாடாக எடுத்துக் கொள்கிறோம். ஆனால் திரு. கர்மயோகி அவர்கள் **originality** என்பது ஆன்மாவின் விசேஷத்திறன் என்கிறார். அதாவது மனத்தை நாம் தாண்டிச் சென்றபின்தான், ஆத்மாவின் **originality** செயல்பட ஆரம்பிக்கும் என்று சொல்கிறார். அறிவின் திறனை மிகவும் நம்புகின்ற வெளிநாட்டு அறிஞர்கள் இக்கருத்தை

அவ்வளவு சுலபமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அறிவிலிருந்துதான் **originality** பிறக்கிறது, ஆத்மாவிற்கு இங்கு வேலையே இல்லை என்றுதான் அவர்கள் அடித்துப் பேசுவார்கள். அவர்களுடைய எதிர்ப்பை நாம் பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை. நம்நாட்டு அறிஞர்களின் செயல்பாட்டை நாம் கவனித்தால், இது எந்தளவிற்கு உண்மை என்று விளங்கும். பகவான் சாவித்ரி, லைப் டிவைன் எழுதும்போது அவர் சிந்திக்கவே இல்லை. அவருக்குத் தோன்றிய எண்ணங்கள் எல்லாம் அறிவைத்தாண்டிய நிலையிலுள்ள ஒரு ஆன்மிக மௌனத்திலிருந்து எழுந்தவைதான் என்று அன்னை சொல்கிறார். பகவான் ஒரு ஆன்மிகவாதி எனும்பொழுது அவருக்கு ஆன்மிகத்தில் எழுச்சி இருந்ததில் ஆச்சரியமில்லை என்று நாம் நினைக்கலாம். ஆனால் கணிதமேதை ராமானுஜம் அவர்களை எடுத்துக் கொள்வோம். கணிதத்திற்கும் ஆன்மிகத்திற்கும் தொடர்பே கிடையாது. அதனால் முழுக்க முழுக்க ராமானுஜம் அவர்களின் கணிதப் புலமை அவருடைய அறிவின் **originality**-யாகத்தான் இருக்க வேண்டும் என்று நாம் பேசலாம். ஆனால் அவருடைய வாழ்க்கை வரலாற்றில் அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், என் இஷ்ட தெய்வமாகிய நாமகிரியின் அருள் எனக்கு ஒளியாக அவருடைய விக்கிரகத்திலிருந்து கிளம்பி வருகிறது. அது என் தலையினுள் நுழைந்து என் அறிவைத்தூண்டி கணித சூத்திரங்களாக வெளிவருகிறது. நாமகிரி தெய்வத்திடமிருந்து வரும் அருள்ஜோதிதான் என்னுடைய அறிவை இயங்க வைக்கிறதே தவிர என்றைக்குமே என்னறிவின் சொந்தத் திறனை நான் நம்பியதே இல்லை என்று சொல்லியிருக்கிறார். இப்படிக் கணித மேதையே அறிவின் **originality**-க்குப்பின் ஆத்மாவின் ஜோதி இருக்கிறது என்று சொல்லும்போது நாம் இவர் சொல்வதைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர பகுத்தறிவை நம்புகின்ற மேலைநாட்டு அறிஞர்களின் வாதத்தை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

(தொடரும்)



## நிலையான சமர்ப்பணம் – நெடு நாளைய யோகம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

30 வால்யூமில் 30,000 பக்கப்படிப்பை ஞானம் வளர்ந்த வழி வரிசைப்படுத்தி எழுதினால் அது பயன்படும். அதற்கு 40 அல்லது 50 ஆசிரியர்கள் ஐந்து ஆண்டுகள் முயன்று 32 கோடி செலவில் அந்த அட்டவணையைத் தயார் செய்தனர். அதன் பெயர் **Propedia**. உலக ஞானத்தைக் கலைக்களஞ்சியம் **(facts)** விஷயமாக சேகரம் செய்து கொடுத்தது. அதை **(Propedia)** அட்டவணை, விஷயத்தைக் கருத்தாக உயர்த்தி **(raised facts to ideas)** அட்டவணைப்படுத்தித் தந்தது. ஒரு **idea** மூலம் 100 அல்லது 1000 **facts** அறிய முடியும். அகலாது அணுகாது தீக்காய்வது ஒரு **idea**. அது அரசருக்கும், கணவனுக்கும், ஆசைக்கும், உலகிலுள்ள 1000 அனுபவங்கட்கும் பொருந்தும். **Propedia** என்பது **idea**-வுக்குரிய அட்டவணை. அதன் மூலம் **idea**-வைத் தெரிந்துகொண்டால் 50 ஆண்டு படிப்பு 5 ஆண்டில் முடியும். மதர் சர்வீஸ் சொஸைட்டி **course** என ஒன்றைக் கண்டு சென்ற ஆண்டு 6 **course** ஏற்படுத்தியுள்ளது. இக்கோர்ஸ் மேலும் **idea**-வை ஞானமாக சுருக்கி மாற்றவல்லது. அன்னை சூழல் தரும் முறை அடுத்த கட்டம். அதை **consent** மனம் சம்மதப்படுவது எனலாம். **Consent** மூலம் 100 ஆண்டில் பெறுவதை ஓராண்டில் பெறலாம். **Printing**-ம் அகர வரிசையும் கலைக்களஞ்சியத்தை அச்சிட்டது. பூரண ஞானம் பெற்ற **editors** ஆசிரியர்கள் தங்கள் ஞானம் மூலம் விஷயத்தை **(facts)** கருத்தாக **(idea)** மாற்றி **Propedia** அட்டவணை எழுதினர். உலகப் பேரறிஞர்கள் ஜெனீவாவில் கூடி சென்ற ஆண்டு **course** எழுதினர். இது **World Academy**-ம் **Mother's Service Society**-ம் செய்த பெரும் காரியம். உலக மாணவர்கட்குப் பயன்படக்கூடியது. $20,000 செலவு செய்து ஐந்து ஆண்டில் படிப்பதை $200 செலவில் 5 மாதத்தில் **M.A.** பயிலும் உலக மாணவர்கட்குரியது. *அதற்குரிய கருவி* **internet**. அச்சு, அகரவரிசை முதற்கட்டம், பெரிய ஆசிரியர்கள் பெற்ற ஞானம்,

அட்டவணை அடுத்த கட்டம்; உலகப் பேராசிரியர்கள் **internet** மூலம் **course** எழுதியது அடுத்தது. அதற்கடுத்தது அன்னை முறை. அன்னை சூழலில் அதைப் பெற உதவுவது *சமர்ப்பணம்.* சமர்ப்பணம் பலித்ததை ஏதோ ஒரு விஷயத்தில் காட்டினால், நிதானமாக அடுத்தடுத்த இடங்களில் சமர்ப்பணம் பலிக்க பொறுமையாகச் செயல்பட வேண்டும். *நிலையான சமர்ப்பணம் நம்மை இந்தக் கட்டத்திற்குக் கொண்டு வந்து விடும்.* அதை மேலும் பல கோணங்களில் பலவகைகளில் ஏற்கனவே எழுதியவை, கூறியவற்றை மீண்டும் மீண்டும் கூறி விளக்க முயல்வது இக்கட்டுரை. இனி வரப்போவதன் சுருக்கம்.

- இடையறாத நினைவு, இடையறாத தரிசனமாகும் அழைப்பைத் தரும் சமர்ப்பணம்.
- *பூரண சமர்ப்பணத்தை இலட்சியமாகக் கொள்ளுதல்.*
- 1 மணி பூரண சமர்ப்பணத்தைத் தினமும் தவறாது பயிலுதல்.
- அன்னையின் சட்டங்களைத் தவறாது பின்பற்றுதல்.
- பெரும் செல்வம் பெறுவது இயலும் என அறிவது. அதைப் பெறுவது.
- எந்த நேரமும் உள்ளிருந்து குதூகலம் பொங்கி வருவது.
- பழைய நினைவுகளை திருவுருமாற்றுதல்.
- *திருவுருமாற்றம் கண்ணெதிரே செயல்படுவதைக் காண்பது.*
- உலகை அறிதல், அன்னை கூறியபடி அறிதல்.
- உள்ளத்தை அறிதல், உள்ளம் உலகை உட்கொண்டதை அறிதல்.

1) இரவும் பகலும் இதயம் நிறைந்து, நம்மையறியாமல் அது பூரணம் பெற்று, ஆழ்மனம் முழு மனமாகி, நாம் அன்னையை அழைத்ததை நம்மைக் கடந்தது ஏற்று *அதுவே சொல்லால் அழைத்து, அச்சொல்லும் அழிந்து,* உள்ளே சென்றது அன்னையாக மாறி அன்னை எழுப்பும் குரல் "கேட்பது" சமர்ப்பணம் நிலையாவது.



2) இலட்சியமாக இன்று கொண்டால் வரும் காலத்தில் இலட்சியம் பூரணம் பெறும். பூரண சமர்ப்பணம் அவதாரப் புருஷனுக்குரியது. *இந்த யோகம் அவதாரப் புருஷனுக்கு உரியதையும் அனைவருக்கும் தீவிர முயற்சிக்குப் பதிலாக க்ஷணம் தரவல்லது.* ஒரு நாள் முழுவதும் பயிலச் செய்யும் முடிவின் தீவிரம் ஒரு மணி பலிக்கும். அதைச் செய்வது அவசியம். *பூரண சமர்ப்பணத்தின் புனிதம் எல்லா வகையிலும் உள்ளும் புறமும் தெரியும். பலனில் தெரிவது எளிது.*

3) ஒரு மணி நேரம் பூரண சமர்ப்பணம் செய்ய ஒரு நாள் செலவாகும் எனர்ஜி தேவை.

4) மெதுவான பேச்சு, பெரும் நல்லெண்ணம் முக்கியம். எந்த சட்டமும் தவறக்கூடாது. சுமார் 10 முதல் 20 சட்டங்களை எழுதிப் பயில வேண்டும்.

5) பெரும் செல்வம் நம்பிக்கைக்குள் வருவது சிரமம். நம் சுபாவத்திற்கேற்ப நம்பிக்கையை சரி செய்து, மனம் இதமாக ஏற்கும் வரை முயல்வது அவசியம்.

   மனம் நம்பியதை செயல்படுத்துவது மகானுக்குரியது. அதை இலட்சியமாகப் பல பாகமாகப் பகுத்து - காலம், அளவு, அந்தஸ்து, கர்மம், பிரமிப்பு அவற்றை ஒன்றொன்றாய் நம்பிக்கைக்குள் கொண்டு வர வேண்டும். *இது பறக்க முடியும் என நம்புவது போலிருக்கும்.* முதலில் பறந்தவர் மனநிலை எழும்.

6) குதூகலம் பொங்கி வர மனம் இதமாக, பிரியமாக மலரும் நிலையிலிருக்க வேண்டும்.

   **Pride and Prejudice, Jane Austen** என்ற மேதை எழுதியது. பெரும் அதிர்ஷ்டம் வந்து ஒரு வருஷ காலம் அவதிப்பட்டு முடிகிறது. கட்டுக்கதை என விமர்சகர்களால் வர்ணிக்கப்பட்டது.

   ஜேன் ஆஸ்டினின் மேதாவிலாசத்தை ஏற்றவர் பலர். மறுத்தவர் பலர். 200 ஆண்டிற்குப்பின் நூல் அச்சிலிருப்பதால் மறுத்தவர் மனம் மாறுகின்றனர். தேவன் எழுதிய

கோமதியின் காதலன் கதையில் 4-ஆம் நாள் ஜமீன்தார் பையனுக்கு ஜமீன்தார் பெண்ணை மணம் முடிக்கிறது. தேவன் ஸ்ரீ அரவிந்தரை அறிந்த கு.பா.ராவின் நண்பர். இந்தியர் என்பதால் *வாழ்வின் சட்டங்களை வளமாக அறிந்திருக்கிறார்*. ரங்கராஜன் இதமான இதயம் இனிமையாகக் கனவு காணும் மனநிலை. சத்திரத்தில் கோமதியைப் பார்த்தவன் வழக்கத்திற்கு மாறாக மீண்டும் அவளைப் பார்க்கிறான். அவள் போய் விடுகிறாள். பத்து நிமிஷம் கழித்துத் தற்செயலாய் அவளைக் குடிகாரனிடமிருந்து காப்பாற்றுகிறான். மீண்டும் மறைகிறாள். எதிர்பாராதவிதமாக அவளிருப்பிடம் போகிறான். ஜமீன்தார் பிள்ளையான அவன் அவளுக்காக டிரைவர் வேலையை ஏற்கிறான். வம்பு வளர்கிறது. சிக்கல் உருவாகிறது. *மனம் சிதையாமல் செயல்படுகிறான்*. அவளும் சந்தேகப்படுகிறாள். அவதி மலிகிறது. முதலாளி திருடச் சொல்கிறார். தாசி வீட்டிற்கு அனுப்புகிறார். வாழ்க்கை திருட்டுப்பட்டம் கட்டுகிறது. யுவதியை ஏற்ற இதயம் கலங்கவில்லை. *வாழ்வே வழி சமைக்கிறது*. *தகப்பனாரும், பெண்ணின் தகப்பனாரும் வருகின்றனர்*. கதை கற்பனை போல் முடிகிறது. என்னைப் பொறுத்தவரை தேவன் **genius**. ஜேன் ஆஸ்டின் **genius**. அவர் போக்குக்கு **French Revolution** உதவுகிறது. ஒரு வருஷம் தேவைப்படுகிறது. தேவன் நான்காம் நாள் கதையை முடிக்கும்வரை “செய்யாத சமர்ப்பணம்” பூர்த்தியாவதைக் காட்டுகிறது.

7) பழைய நினைவுகள் சிம்ம சொப்பனம். “மறப்பது, மன்னிப்பது” தத்துவம். நடைமுறை, கடந்த காலம் கடுமையானது. திருவுருமாறினால் கடந்த காலம் மாறும். திருவுருமாறுவது உலகம் அறியாதது. “*நாவினால் சுட்ட புண் உள் ஆறாது*” என்பது அனுபவம். அவற்றைச் சமர்ப்பணத்தால் திருவுருமாற்ற முயன்று வெற்றி பெறுவது யோகப் பயிற்சி. செய்வது தவிர்க்க முடியாதது. மகனானாலும், தாயானாலும் சுட்டது ஆறாது. ஒருவர் செய்த தவற்றை மகன் செய்ததாகக் கருதி மருகும் தாயாருக்குச் செய்தது வேறொருவர் எனத்



தெரியும்பொழுது மனம் மாறும். அதுவும் 98% மாறும். பட்ட அடி மறக்காது. நாம் செய்த தவற்றுக்குப் பிறர் மேல் கோபப்படுவது பெரும்பாலோர். அது தெரிவது அரிது. ஏற்பது சிரமம். ஏற்றபின் திருவுருமாறும். *திருவுருமாறியபின் உள்ளம் விழாக் கொண்டாடும். அது குதூகலம்*. திருவுருமாற்றம் பிரபஞ்சத்தின் முழு அசைவு ஒருவரில் பிரதிபலிப்பது. அது ஆன்மிக அனுபவம். “ஆத்ம சமர்ப்பணம்” என்ற அத்தியாயத்தில் திருவுருமாற்றம் ஒவ்வோர் இழையாகச் செய்யப்பட வேண்டும் என்று கூறுகிறது. கோபம் மாற மனம் ஒவ்வாது. பத்து ஆண்டிற்குமுன் நாம் ஒருவர் மீது பட்ட கோபத்தைத் திருவுருமாற்ற தீவிர முடிவு செய்து, தத்துவத்தை ஏற்றபின், *மனம் “நான் திருவுருமாறிவிட்டேன், ஏன் அவர் வந்து மன்னிப்புக் கேட்கவில்லை?” எனக் கேட்கும்*. அதுவே மனித மனநிலை. உள்ளபடி நம் தவற்றை அறிந்து, புரிந்து, மனம் ஏற்றால் அதே நேரம் சம்பந்தப்பட்டவர் வந்து பத்து ஆண்டிற்குப்பின் தலைகீழாக மாறி நடப்பார். அதுவே நம் உண்மையைக் குறிக்கும்.

*சுயநலம் பரநலமாகும் நேரம் பரவசப்படும் மனம் ஆத்ம விழிப்பு தரும். அது உயர்ந்த நேரம்*. ஒரு முறை அது நடந்தால் ஒவ்வொரு விஷயத்திலும் அது நடக்க முயல்வதே யோகம். யோக சமர்ப்பணம்.

உலகம் இறைவனால் இயக்கப்படுவதை நாம் காண்பதில்லை. வீட்டிலுள்ள சிறுவர்கட்கு பெரிய குடும்ப விஷயங்களோ, ஊர் அரசியலோ தெரியாதது போல் நமக்கு ஆண்டவன் செயல் தெரிவதில்லை. மனத்தைக் கடந்தால் முதல் நிலை அறிவு வரும். உணர்ச்சியைக் கடந்தால் அடுத்த நிலை தெரியும். உடல் உணர்ச்சியைக் கடந்தால் அனைத்தும் தெரியும் என்று அன்னை கூறுகிறார். “மனம், உயிரின் இரகஸ்யம் நான் அறிவேன். உடலின் இரகஸ்யம் தெரியவில்லை” என்றார். மனத்தின் இரகஸ்யம் தெரியும் பொழுது *உலகில் புரியாததிருக்காது*. உயிரின் (பிராணன், **vital**) இரகஸ்யம் தெரிந்தால் பிடிக்காதது இராது. உடலின் இரகஸ்யம் தெரிந்தால் பிரபஞ்சத்தில் முடியாதது இருக்காது. நாம் வாழ்வது

மூன்றாம் பரிமாணம் (3rd dimension). காலம் நம்மைக் கடந்தது. நல்லது, கெட்டது; உயர்ந்தது தாழ்ந்தது இல்லையெனில் மனத்தை அவரால் கடக்க முடியும். *காய்தல், உவத்தலின்றிய மனம் உயிரைக் கடக்கும். அவருக்குத் தோல்வியிருக்காது.* உடலின் இரகஸ்யம் தெரிந்தவரால் உலகில் மரணத்தை வெல்ல முடியும். *எதற்கும் சிறு உருவம்* (miniature) *உண்டு.* ராஜா நாட்டை ஆள்கிறார். வீட்டில் நடப்பது ஒரு சிறு ராஜ்யம். இக்கருத்தின் சாரத்தை ஓர் அன்பர் ஆழ்ந்து முழுமையாக ஏற்றால் அவரைச் சார்ந்த அனைவருக்கும் ஆயுள் வளரும்.

அன்னை கூறுபவை உயர்ந்த கருத்துகள். உயர்ந்தவரிலும் உயர்ந்தவர்க்குரியவை. *மனம் தேவையற்ற கருத்துகளைக் கைவிட வேண்டும் என்கிறார்* (Decondition of Mind). அதை செய்வதற்குமுன் நாம் இன்று உள்ள நிலையென்ன என்று காண்போம். இக்கருத்துகளை தெளிவாகக் குறிக்கும் தமிழ்ச்சொல் தெரியவில்லை என்பதால் அது அடிக்கடி என் எழுத்தில் இனி வரும் என்பதால் இங்கு அவற்றை - Pre-occupation, Occupation - விளக்குகிறேன். இது புரிந்தால் இனி எழுதும் பொழுது இச்சொற்களை நான் பயன்படுத்த முடியும். *நம் வாழ்க்கை ஒரு சில நம்பிக்கைகளாலானது.* பாவ, புண்ணியம், கர்மம், கடமை, முறை, நெறி, இலட்சியம், ஒழுங்கு, நல்லது ஆகியவற்றைப் பற்றி நமக்கு ஒரு அபிப்பிராயம் உண்டு. நாம் அவற்றைப் பின்பற்றினாலும், பின்பற்றாவிட்டாலும், *அவை நம்மை ஆட்கொள்கின்றன.* நாம் அதை நினைப்பதில்லை. ஆனால் அவற்றிற்கு எதிராக நாம் நடப்பதில்லை. அவை நம் நம்பிக்கைகள். அதை Occupation மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளவை எனக் கூறுகிறோம். எலக்ஷன், திருமணம், கடன், வரவேண்டிய பணம், உடல் நலம் பாதிக்கப்பட்டால் அவை எல்லா நேரமும், எல்லா வகைகளிலும், மனத்தை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டு, அரித்துக் கொண்டிருக்கும்.

(தொடரும்)



# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

*வழிபாடும் சரணாகதியும்:*

எந்த உதவியும் பிறரைக் கேட்காமலிருப்பதே சிறந்த கோட்பாடு; நம் மரபில் வந்த உயர்ந்த இலட்சியம். மனிதனையே உதவி கேட்கவில்லை என்றால், தெய்வ சந்நிதியில் நிற்கும்பொழுது எப்படி இது வேண்டும், அது வேண்டும் என்று கேட்பது? மனிதனைக் கேட்பவரும் இறைவனைக் கேட்க கூச்சப்படுவார்கள். சிறப்பானவர்கள் இறைவனை நினைத்தபின் எல்லாவற்றையும் மறந்து-விடுவார்கள். மறந்த நிலையே சிறந்த நிலையாகும். எதை வேண்டுமானாலும் தெய்வத்தைக் கேட்கலாம் என்ற அன்னை, அத்துடன் நிற்காமல் எதையும் கேட்காமலிருப்பது சிறந்தது என்றார். இவற்றையெல்லாம் எப்படி விளங்கிக்கொள்வது?

முயற்சி என்பது சிறந்தது. முயற்சி செய்து ஒரு காரியத்தைச் சாதிக்க முடியும் என்ற நிலை இருக்கும்வரை முயற்சிக்கு இடம் உண்டு. அந்த முயற்சி தெய்வத்திற்கு விருப்பமானது. தெய்வச் சேவைக்கு நிகரானது. உடலின் முயற்சியை உழைப்பு என்கிறோம். உழைப்புக்கு உலகத்தில் எங்கும் சிறப்புண்டு. அறிவின் முயற்சியை ஆராய்ச்சி என அறிவோம். ஒருவனுடைய ஆராய்ச்சி உலகை உயர்த்தக்கூடியது. கற்றோர்க்குச் சென்ற-விடமெல்லாம் சிறப்பு. பிரார்த்தனை ஆன்மிக முயற்சி. எனவே முயற்சிகளில் முதன்மை ஆனது.

தன் முயற்சியைப் பூர்த்தி செய்த மனிதன் மீதியை இறைவனுக்குச் சரணம் செய்கிறான். தன் முயற்சியில் குறை வைத்தவனுக்குச் சரணாகதியில் இடம் இல்லை. தன் முயற்சியைப் பூர்த்தி செய்தவனே சரணாகதிக்கு உரியவனா-கிறான் என்பதால், சரணாகதியை ஏற்றுக்கொண்டவனுக்கு

முயற்சி இனி இல்லை. எனவே ஆன்மிக முயற்சியான பிரார்த்தனையும் இல்லை.

மழை வேண்டும் என்று நினைக்கும் விவசாயி, மழையைத் தேடும்முன் விதையைத் தேடியிருக்க வேண்டும்; உழுவதற்குரிய ஏர், கலப்பையைத் தேட வேண்டும். மழை அவனுடைய முயற்சியிலில்லை. விதை, உழவு, ஏர், கலப்பை, உழைப்பு அவனுடையன. தன் பங்கை எல்லாம் குறைவறச் செய்தபின் அவன் மழைக்காகப் பிரார்த்தனை செய்தால், உடல் உழைப்பையும், அறிவின் பொறுப்பையும் பூர்த்தி செய்தபின் ஆன்மிக முயற்சியான பிரார்த்தனையை அவன் நாடுவதாக அர்த்தம். ஒரு முறை பிரார்த்தனை செய்தால் பெருமழை பெய்யும். தன் கடமையை நிறைவேற்றியதால், விவசாயி பிரார்த்திக்க ஆரம்பிக்கும்முன் மழை தானாகப் பெய்யும்; பிரார்த்தனை தேவை இல்லை. உழைப்பும், பொறுப்பும் உயர்ந்த பிரார்த்தனைகளாகும்.

ஒரு கட்டத்தில் முயற்சி நமக்குரியது. அதில் உயர்ந்த முயற்சி, ஆன்மிக முயற்சியான பிரார்த்தனை. நமக்கு முயற்சிக்குரியது என்ற வரைக்கும் பிரார்த்தனைக்கு இடம் உண்டு. அடுத்த கட்டத்தில் நம் முயற்சி முடிந்துவிட்டால், சரணாகதியை மேற்கொள்கிறோம். அங்கு முயற்சியில்லை. எனவே ஆன்மிக முயற்சியான பிரார்த்தனைக்கும் இடமில்லை. அன்னை இதே கருத்தை யோக மொழியில் சொல்லும் பொழுது “(ego) தான் எனும் உணர்வு உள்ளவரை முயற்சி அவசியம். தான் எனும் உணர்வு அழிந்தபின் முயற்சியும், அதன் வடிவமான பிரார்த்தனையும் தேவையில்லை” என்கிறார். தான் அழிந்தபின், மனித முயற்சியை அவனுள் உறையும் தெய்வமே நேரடியாக மேற்கொள்கிறது என்கிறார். முதற்கட்டத்தில் முயற்சியைக் குறைப்பதும், இரண்டாம் கட்டத்தில் முயற்சி எடுப்பதும் சரியில்லை. தவறாகவும் கருதப்படும். நாம் முதற்கட்டத்தை மட்டும் கருதுவதால், அதில் சிறந்த முயற்சியான பிரார்த்தனையை எப்படி மேற்கொள்வது என்பதை மட்டும் இக்கட்டுரையில் கருதுவோம்.



அன்னையிடம் நாம் காணும் முறையின் சிறப்பு ஒன்றை மட்டும் பிரார்த்தனையுடன் தொடர்புள்ளதால் கூறிவிட்டு மேலே போகிறேன். வாழ்க்கையில் ஒரு முயற்சியை மேற்கொண்டால் பிரார்த்தனை என மனிதன் அறிந்தது என்னவென்றால் அந்த முயற்சி உரிய காலத்தில் வெற்றியடைவதே. கல்லூரியில் சேரும் மாணவன் பிரார்த்தனை செய்து அது பலித்தால், அவனது படிப்பு இடையூறின்றி முடிந்து, எதிர்பார்த்த பலனைக் கொடுக்கும். அன்னை முடிவில் கிடைக்க வேண்டிய பலனை முதலிலேயே கொடுத்துவிடுவார்.

பிரார்த்தனை உயர்ந்தது, அற்புதங்களை நிகழ்த்தவல்லது என்பதனால், அதைச் சிறந்த முறையில் பயன்படுத்தும்முன் எதற்கு அதைப் பயன்படுத்த வேண்டும் என்பது முக்கியம். ஆன்மிகப் பலன்களை அடைவதற்காகப் பயன்படுத்துவதே தலையாயது. தியானம் பலிக்க, சாந்தம் நிலவ, மௌனம் சித்திக்க, பக்குவம் பெற பிரார்த்தனையைப் பயன்படுத்துவதே அதற்குச் சிறப்பாகும். அதற்கு அடுத்தபடியாக, அறிவு வளர, நேர்மையைக் கடைப்பிடிக்க, கற்பனை சிறக்க, புது எண்ணங்கள் மனதில் உதிக்க பிரார்த்தனையைக் கையாளலாம். அடுத்த நிலையில் கலைவளம் பெருக, தைரியம் அதிகமாக, உற்சாகம் வளர பிரார்த்தனை செய்யலாம். கடைசியாக ஆயுள் வளர, ஆரோக்கியம் பெருக பிரார்த்திக்கலாம். ஆன்ம நலம், மன விசாலம், உயிர், உயிர் சிறப்பு ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்ட பிரார்த்தனைகள் இவை. இக்கட்டுரையில் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளையே முக்கியமாகக் கருதி, அதற்குப் பிரார்த்தனையை எப்படிப் பயன்படுத்த வேண்டும் எனக் கருதுவதால் மேற்சொன்னவற்றை விளக்காமல் அன்றாட வாழ்க்கையில் அவை இடம் பெறும் அளவுக்கே அவற்றை எடுத்துக்கொள்வோம்.

மனிதனுடைய பிரச்சனைகள் நமக்குப் பரிச்சயமானவை. அவற்றைப் பாகுபாடு செய்து சில உதாரணங்கள் மூலம் விளக்கும்முன் பிரார்த்தனைக்குரிய முறையைக் கருதுவோம்.

*பிரார்த்தனைக்கு ஜீவன் உண்டு:*

பிரார்த்தனை சிறப்புற வேண்டுமானால் அதற்குரிய ஜீவன் சிறப்புறும் வகையிலும், நம்முடைய ஜீவனோடு பிரார்த்தனையின் ஜீவன் சக்தி வாய்ந்த தொடர்புகொள்ளும் வகையிலும் பிரார்த்தனையை நாட வேண்டும். பிரார்த்தனையின் சிறப்பை நாம் உணர்ந்து, அதன் ஜீவனின் உயர்வை நம் ஜீவன் உணர்ந்தால் முதல் கட்டம் வெற்றி பெறுகிறது. எளிய மொழியில் சொன்னால், "அவருக்குப் பிரார்த்தனை என்றால் உயிர். அது சம்பந்தமான விஷயங்களை லேசாகப் பேசாதே" என்று பிறர் சொல்லும்பொழுது நம் ஜீவனில் பிரார்த்தனையை இஷ்ட தெய்வமாக பிரதிஷ்டை செய்துவிட்டோம் என்று பொருள். நம் வாழ்க்கைக்குப் பிரார்த்தனை மையமாகவும், உயிருள்ள மையமாகவும் இருக்க வேண்டும்.

குறிப்பாகத் திருமணம் ஆக வேண்டும், பரீட்சை பாஸாக வேண்டும் என்பன போன்ற பிரார்த்தனைகளை மேற்கொள்வதெப்படி என்பதைக் கருதுவதன் முன்பு பிரார்த்தனை என்ற முறையை எப்படி அனுஷ்டிப்பது என்பது அவசியம். இதற்குக் காலம், இடம், பிரச்சனை என்று பல அம்சங்களிருந்தாலும், பிரார்த்தனையை மிகவும் உயர்ந்த முறையில் கையாள அதன் ஜீவனுடன் நம் ஜீவன் தொடர்புகொண்ட பின் முதலாவதாகச் செய்ய வேண்டியது பிரார்த்தனைக்கு நம்முள் இடம் அளிப்பதாகும். பிரார்த்தனையின் பலன் இரு விஷயங்களைப் பொறுத்தது. ஒன்று, இறை அருள். மற்றது, நம்முடைய தீவிரம். இறையருள் என்றும் ஒரே நிலையிலுள்ளது. நம் தீவிரத்தின் அளவு நம்மிடம் இருப்பதால், நம் தீவிரத்தை அதிகபட்சமுள்ளதாகச் செய்துகொள்ளுதல் முக்கியம்.

*பிரார்த்தனைக்குரிய இலட்சணம்:*

பிரார்த்தனையின் தீவிரம் நம்முடைய சக்தி **(energy)**, மனத்தின் நிலை **(level of concentration)**, பிரச்சனையைத் தீர்ப்பதில் உள்ள அக்கறை, பிரச்சனையின் உருவத்தைப்



புரிந்து கொள்ளும் அளவு, பிரச்சனையில் நம் பங்கை விலக்க நாம் முன் வருதல் போன்ற பல அம்சங்கள் உள்ளன.

காலையில் நாம் தெம்புடன் இருக்கிறோம். அக்காரணத்தால் அந்த நேரம் பிரார்த்தனைக்குச் சிறந்தது. நமக்குச் சக்தி அதிகமாக இருந்தால் பிரச்சனை எளிதில் தீரும். மனம் எந்த அளவுக்கு ஒரு நிலைப்படுகிறதோ, அந்த அளவுக்குப் பிரச்சனை எளிதில் வழிவிடும். பிரச்சனை தீர்வதில் நமக்கு ஆர்வம் அதிகமாக இருந்தால், அது தீர்வுக்கு உதவும். பிரச்சனை உண்டான வழிவகை நமக்குப் புரியாவிட்டால், அது தீர அது ஒரு தடையாகும். ஏற்பட்ட வகை தெளிவாகத் தெரிந்தால், சுலபமாகத் தீரும். நாமே ஒரு வகையில் பிரச்சனை உருவாகக் காரணமாக இருந்திருந்தால், அதை விலக்கும்வரை பிரச்சனை தீராது. எனவே, பிரச்சனை தீர ஒரு பிரார்த்தனையை மேற்கொள்ளும்முன் அதற்குரிய நேரம் நாம் தெளிவு அதிகமாகப் பெற்ற நேரமாக குறிப்பிட வேண்டும். குறிப்பிட்டபின் கூடியவரை தினமும் அதே நேரத்தில் பிரார்த்தனையைத் தொடங்க வேண்டும். மனம் ஒரு நிலைப்படுதல் அவசியம் என்பதால், பிரார்த்தனையை மேற்கொள்ள சில மணி முன்னர் மனத்தை நிலைப்படுத்தி, பிரச்சனையின் பக்கம் கொண்டுவந்து ஒரு நிலையாக இருக்க நம்மைத் தயார் செய்துகொள்ள வேண்டும். பிரச்சனையைத் தீர்க்க நம்முடைய ஆர்வம் எப்படிப்பட்டது என்று சோதனை செய்து, பிரார்த்தனையை ஆரம்பிக்கும்முன் ஆர்வத்தை அதிகபட்சமாக்கிக் கொள்ளுதல் நலம். நமக்குரிய பங்கு என்று ஒன்று அதிலிருந்தால், பிரார்த்தனையை ஆரம்பிக்காமல், நம் பங்கை விலக்க முயன்று, விலக்கிய பின்னரே பிரார்த்தனையைத் தொடங்க வேண்டும்.

இவ்வளவையும் நமக்குத் திருப்தியாகத் தயார் செய்தபின், மனத்தைச் சோதனை செய்தால், பிரார்த்தனை ஆரம்பித்த கொஞ்ச நாழிகைக்கெல்லாம் தானும் பேச ஆரம்பிக்கும். நாம் ஒரு பக்கம் பிரார்த்தனையைச் சொல்லிக்கொண்டிருந்தால், மனம் ஒரு பக்கம் வேறு ஒன்றைச் சொல்ல ஆரம்பிக்கும். மனம் ३ நிமிஷம் கழித்துப் பேச ஆரம்பித்தால், பிரார்த்தனையை

3-ஆம் நிமிஷமே நிறுத்திவிடுதல் நல்லது. அடுத்த முறை பிரார்த்தனை சலனமின்றி 5 அல்லது 6 நிமிஷம் வரை பலிக்கும். கொஞ்சம் கொஞ்சமாக, நிமிஷம் நிமிஷமாக அதிகரித்து, பிரார்த்தனை 30 நிமிஷமானால் 30 நிமிஷமும் மனம் நிலையாக இருக்கும்படிக் கொணர்தல் அவசியம். மனத்தில் சலனம் பின்னணிக்குப் போனால் மௌனம் ஏற்பட்டு பிரார்த்தனையைச் சூழ்ந்துகொள்வது தெரியும். மௌனம் வளர நாம் துணையாக இருக்க வேண்டும்.

இவ்வளவு முஸ்தீபுகளையும் நமக்குத் திருப்தியாகச் செய்து, பின்னர் நேரம், இடம் குறிப்பிட்டு பிரார்த்தனையை ஆரம்பித்து, தினமும் தவறாது தொடர்ந்தால், பிரார்த்தனை அதற்குரிய இலட்சணத்துடனிருக்கிறது என்று பொருள்.

அப்படிப்பட்ட பிரார்த்தனை அதற்குரிய பலனைக் கொடுக்கும். அது தீவிரமானதொன்றானால், அதிக பலனை அளிக்கும். பிரார்த்தனையால் மனம் நெகிழ்ந்தால், பலன் உடனே கிடைக்கும். எடுத்த பிரார்த்தனையை ஒரு நாளும் தவறாமல் கைக்கொண்டால் பலன் நிச்சயமாகக் கிடைக்கும். குடும்பத்துப் பிரச்சனையாயிருந்து அனைவரும் பிரார்த்தனை செய்தால், பலன் அபரிமிதமாக இருக்கும். அண்ணனுக்கு வேலை வேண்டும் என்று நாம் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும்பொழுது, அண்ணன் தானே பிரார்த்தனை செய்ய முன்வந்தால் பலன் அதிகமாகச் சீக்கிரம் கிடைக்கும்.

பிரார்த்தனையை மேற்கொள்ளும்முன் நாம் செய்யக்கூடியது என்று ஒன்றிருந்தால், அதைப் பூர்த்தி செய்து பின் பிரார்த்தனை செய்தல் நல்லது. இல்லையெனில் பிரார்த்தனைத் திறனில் ஒரு பகுதி அந்தக் குறையை நிறை செய்யச் செலவாகும்.

ஒரு வேலையில் உள்ள எல்லாப் பொறுப்புகளையும் பூரணமாக நிறைவேற்றினால் பலன் கிடைக்கும். அங்குப் பிரார்த்தனை தேவைப்படாது. பிரார்த்தனை தேவைப்பட்ட ஒன்றானாலும், பிரார்த்தனையின்றி பலிக்கும். ஏதாவது ஓர் அம்சம் குறையானால்தான் பிரார்த்தனை தேவைப்படுகிறது. தன் பங்கைச் சரிவர முடித்துவிட்ட விவசாயி, மழை தன்



கையில் இல்லாததால் பிரார்த்தனை செய்தால் உடனே மழை பெய்யும். பிரார்த்தனையே செய்யாவிட்டாலும் கடமைகளை நிறைவேற்றிய காரணத்தால் மழை தானே பெய்யும் என முன்னரே குறிப்பிட்டேன்.

ஒரு கூட்டம் ஏற்பாடு செய்திருக்கிறோம். நம் பங்கைச் சரிவர முடித்துவிட்டோம்; தலைவர் நேரத்தில் வருவதோ, கூட்டம் நடக்கும் பொழுது மின்சாரம் தடைபடாமலிருப்பதோ, நாம் மேடையில் பேசும்பொழுது பேச்சு நினைவுக்கு வருவதோ, நம் கையில் இல்லை. இதுபோல் ஓர் அம்சம் குறைவுபட்டால், பிரார்த்தனை தேவைப்படுகிறது. நம்மால் முடிந்த அத்தனையும் செய்தபின் நம் கையில் இல்லாத அம்சத்தால் குறை வரக்கூடாது என்று செய்யும் பிரார்த்தனை பூரணமாகப் பலிக்கும். நம் திறன் முடியும் இடத்தில் அன்னை செயல்பட ஆரம்பிக்கிறார். இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால் நம்மால் தீர்க்க முடியாத பிரச்சனை என்று ஒன்று இல்லை என்பதை அனுபவம் காண்பிக்கும்.

*அகவுணர்வும் புற நிகழ்ச்சியும்:*

ஒரு காரியத்தில் 10 விஷயங்கள் அடங்கியிருக்கும்பொழுது 9 விஷயங்கள் நம் கையில் இருந்தாலும், பத்தாவது விஷயம் நம் கையில் இல்லாவிட்டால், 9 விஷயங்களிலும் நம்மால் செய்யக் கூடியவற்றை முடித்தபின், அன்னை அந்தப் பத்தாவது விஷயத்தை முடிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் நம்பிக்கையால்தான் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தோன்றுகிறது. நம்பிக்கையால் ஏற்றுக்கொண்டால் போதும். இருந்தாலும், அதற்கும் ஒரு விளக்கம் கொடுக்கலாம்.

ஆன்மிக அடிப்படையில் வெளி நிகழ்ச்சிகளும், மன நிலையும் ஒன்றே. நம் கண்ணுக்குத் தெரிவது வெளி நிகழ்ச்சி; அகவுணர்வு தெரிவதில்லை. தெரிந்தால் புரிவதில்லை. புற நிகழ்ச்சி அகவுணர்வின் பிரதிபலிப்பு என்பது ஆன்மிகக் கருத்து.

(தொடரும்)

## அன்பர் அனுபவம்

P. நடராஜன்

ஸ்ரீ அன்னைக்கும் பகவான் ஸ்ரீ அரவிந்தருக்கும் சமர்ப்பணம்.

கடந்த ஒரு மாத காலத்திற்கும் மேலாக (**From 20th May**) **Hourly Consecration**-ஐ பயின்று வருகிறேன்.

விழித்திருக்கும் 20 மணி நேரமும் தவறாமல் அன்னையின் நினைவு எழுந்து மிகச் சரியாக நொடி 59-லிருந்து 60க்குப் போகும்போது காத்திருந்து சமர்ப்பணம் செய்ய முடிந்தது.

உறங்கப் போகும் முன்னும் விழித்தவுடனும் செய்யும் சமர்ப்பணம் உறக்க நேரத்தைச் சமர்ப்பணம் செய்ததாகக் கொள்ளலாம் என்ற தங்களது வரிகளைப் படித்தேன். அதன்படி சமர்ப்பணம் செய்து வந்தேன்.

'நிலையான சமர்ப்பணம் - நெடுநாளைய யோகம்' என்ற கட்டுரையைப் படித்த பின்னர் தூக்கத்தில்கூட சமர்ப்பணம் செய்ய, அன்னையை வேண்டினேன்.

முதலில் ஒரு நாளில் 22 மணிநேரம் செய்ய முடிந்தது. திண்டுக்கல் தியான மையம் சென்றபொழுது, மையத்தின் பொறுப்பாளர், 'அன்னையிடம் சொல்லிவிட்டால் அன்னையே நினைவுபடுத்துவார்கள்' என்றார். எனது முயற்சியையும் அன்னைக்குச் சமர்ப்பணம் செய்தேன். திண்டுக்கல் சென்று வந்த பஸ் பயணத்தில் இரவு முழுவதும் இரண்டு நாட்கள் சமர்ப்பணம் ஆனது.

எந்தவித அலாரம் அல்லது வெளிக் கருவி உதவி கொள்ளவில்லை.

லயத்தில் இருந்தால், நெற்றிப்பொட்டில் ஒருவிதமான துடிப்பும் குவிதலும் உணரும் தருணம், உதாரணமாக 12:59 ஆகி 1:00 ஆக இருக்கும் கடைசி நிமிடமாக இருப்பதை உணர முடிகிறது.

அல்லது இருதயக் கமலத்தில் சில் என்ற ஈர உணர்வு ஏற்படும்போது சமர்ப்பணம் ஆரம்பித்து விடுகிறது.

தவற இருந்த தருணங்கள் என்றால், கோபம், எரிச்சல் போன்ற ரியாக்ட் ஆகும் போது தவற இருந்தது கடைசியில் உணர்ந்து அன்னை நினைவை செறிவுபடுத்தி சமர்ப்பணம் செய்தேன்.



அனுபவங்கள் பல இருந்தாலும் சிலவற்றைப் பகிர்ந்துகொள்ள விழைகிறேன்.

ஒரு முறை மதியம் ஒரு மணி ஆக ஐந்து நிமிடம் இருக்கையில் ஒரு கடையில் ஷாம்பூ வாங்கக் காத்துக்கொண்டு இருந்தேன். கடைக்காரப் பெண்மணி வேறு ஒருவருடன் வியாபாரம் குறித்து பேசிக்கொண்டு இருந்தார். அன்னையிடம் சொல்லிவிட்டு, அமைதியாக வாங்க இருந்த பொருட்களின் பட்டியலை நினைவுபடுத்திக் கொண்டு இருந்தபோது, அப்பெண்மணியின் வார்த்தைகள் என்னை அன்னையிடம் திருப்பியது. மணி பார்த்தால் மணி ஒன்றை நெருங்கிக்கொண்டிருந்தது. சமர்ப்பணம் ஆனது. வியாபாரம் குறித்த பேச்சை நான் காதில் வாங்காவிட்டா-லும் அவர் சொன்ன வாசகங்கள் என் காதில் விழுந்தன.

அவை: *மதரை எனக்குத் தெரியும் என்று நாம் சொல்ல முடியாது.* **Mother is an Ocean. He who chooses the Infinite has already been chosen by the Infinite** *என்பது போல் மதர்தான் நம்மைத் தேர்ந்தெடுத்து உள்ளார்கள். அதனால்தான் நாம் மதரை தெரிந்து கொண்டோம். அவர் காட்டிய* **choice**-*தான் இந்த எனது தொழில். எனவே மதர்ஸ் சாய்ஸ் என்றே பெயர் வைத்து விட்டேன்.*

நினைவுபடுத்திய அன்னையை நன்றிப்பெருக்குடன் நினைத்துச் சமர்ப்பணம் செய்தேன்.

கடந்த பத்து நாட்களாக தூங்கும் நேரமும் சமர்ப்பணம் ஆகிறது.

உறங்கப் போகும்முன் அன்னையிடம் சொல்லிவிட்டு படுப்பேன். ஒரு நாள், நள்ளிரவு 2 மணிக்குச் சமர்ப்பணம் செய்துவிட்டு உறங்கினேன். மூன்று மணிக்கு விழித்து சமர்ப்பணம் செய்தேன். களைப்பில் உறங்கிப்போனேன்.

திடீரென்று 'அப்பா அப்பா' என்ற எனது காதருகில் **whisper** வாய்சில் எனது மகள் கட்டிலில் அவளது அம்மாவுடன் படுத்திருந்தவள், கீழே உறங்கிக் கொண்டிருக்கும் என்னை பாத்ரூம் போக வேண்டுமென எழுப்பினாள். மணியைப் பார்த்தேன் மணி மூன்று மணி ஐம்பத்தியொன்பது. அவளை அழைத்துக்கொண்டு சென்று, நான்கு மணியும் சமர்ப்பணம் ஆனது.

மீண்டும் உறங்கிப் போனேன். மறுபடியும் பெண் எழுந்து வந்து மறுபடியும் பாத்ரூம் போக எழுப்பினாள். ரியாக்ட் ஆகாது எழுந்தேன். மணி நான்கு ஐம்பத்தியொன்பது. எழுப்பியது மகளில்லை; அன்னையென அறிந்தேன். ஐந்து மணியும் சமர்ப்பணம் ஆனது. மறவாது நினைக்கும் அன்னையை நெகிழ்வான நன்றியுடன் நினைத்தேன்.

இப்போதெல்லாம் உறங்கும்போது அன்னை நினைவு அதிகரிக்கும் நேரங்களில் விழிப்பு வந்து மணி பார்த்தால் மணி ஐம்பத்தியொன்பது நிமிடம் தொட்டு சமர்ப்பண நேரமாக இருந்ததைப் பார்த்து ஸ்ரீ கர்மயோகி அவர்களது வார்த்தைகள் சத்தியமானவை; அவை அவரது யோக அனுபவங்கள் என்பதை உணர்கிறேன்.

செய்யும் வேலையில் ஆர்டர்கள் அடுத்தடுத்து வருகின்றன. ஒரு ஆர்டர் மதிப்பு சாதாரணமாக வருவதைவிட 35 மடங்குகள் இருந்தது. கடந்த இரு ஆண்டுகளில் இதுவே அதிகபட்சமான ஆர்டர்.

மற்றொரு நபர் மூலமாக வந்த சாம்பிள் வேலை **client** ஏற்றுக்கொண்டு ஆர்டர் வந்தது. முதல் **chapter** கொடுக்கும் போதே பணமும் அக்கௌண்டில் போட்டு வேலை கொடுத்தனர். வேலை கொடுத்த நண்பரோ எனது அனுபவத்தில் இதுபோன்று பார்த்ததில்லை. வேலை செய்து முடித்து பணத்திற்காக காத்திருப்பதே எனது அனுபவம். சிலர் கொடுக்காமலும் இருக்கின்றனர். அதுவும் உள்நாட்டு கஸ்டமர் இது போல் நடப்பது எனக்குப் புதியது என்றார். உடன் எனக்கும் பணம் அனுப்பினார்.

மேலும் ஒரு ஆச்சர்யம். முதல் **chapter** பக்கங்களைப் பார்த்த **client**, பாராட்டியதோடு தங்களின் வேலையை, மெனக்கெட்டு செய்வதைக் கருத்தில்கொண்டு பேசிய தொகையைவிட அதிகமாக கொடுக்கிறோம் என்றனர். அதன்படியே ஒன்றரை மடங்கு பணத்தைக் கொடுத்தனர்.

**Actual lines from the client's mail:**

*Kindly note, depending upon the effort involved, we can offer an additional amount on top of the original quote. But we will request you to maintain the same design quality throughout as in the 1st Chapter.*



மற்றுமொரு அனுபவம். கடந்த இரு ஆண்டுகளாக அணுக வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்த ஒரு கம்பெனியிலிருந்து புதிய வேலை வாய்ப்பு ஒரு நண்பர் மூலமாக வந்து, அவருடைய குழுவுடன் சேர்ந்து புதிய **expansion** முயற்சியில் உள்ளேன். இடம் பார்த்து, மற்ற ஆயத்த பணிகள் நடந்து கொண்டு உள்ளன. **Inspection** செய்து பிறகு **sample job approve** ஆனவுடன் வேலை தருவார்கள்.

அன்னை தரும் ஆன்மிக வாய்ப்பைப் பெறுவதைத் தாமதப்படுத்துவதாய் என்னிடம் தடையாய் எது இருப்பினும் அவற்றை அகற்றி அருள ஸ்ரீ அன்னையை ஒவ்வொரு மணியும் **Let Thy will be done, not my will** என்று சமர்ப்பித்தபடி உள்ளேன்.

கரையிலாப் பேராழியில் கலந்திட விழையும் அமைதியான நீரோடைபோல் புதிய ஒளியினை நாடும் பேரார்வத்தில் பிரபஞ்சத்தின் தலைவர் ஸ்ரீ அரவிந்தரையும் அவருக்குப் பின்னால் உள்ள சக்தி ஸ்ரீ அன்னையையும் வணங்கிக் காத்துக்கொண்டிருக்கின்றேன்.

தங்களின் பாதம் பணிந்து ஆசியையும் வழிகாட்டுதல்களையும் வேண்டுகிறேன்.

## ஜீவிய மணி

*குடும்பத்தில் தலைவர் சொல் தட்ட முடியாதது. அவர் சுயநலமியாக இருந்தால் அனைவரும் வாடி வதங்கி விடுகின்றனர். அவர் மனைவி சொல்லுக்குக் கட்டுப்பட்டவரானால் அவள் ஆட்சி நடக்கும். மகன் சம்பாதிக்க ஆரம்பித்தால் அவனே அதிகாரம் செய்வான். எவர் அதிகாரம் செய்தாலும் அது கொடுமை. குடும்பப் பண்பு என்று ஒன்று இருந்து, தலைவர் குடும்பத்தை முதலாகக் கருதி நடந்தால் அனைவர் வாழ்வும் இனிமையாக இருக்கும். குடும்பம் முழுமையானது. சுயநலம் பகுதியானது. மனம் சுயநலம் போல் பகுதியானது. ஜீவன் குடும்பம் போல் முழுமையானது. ஜீவன் ஆட்சி செய்தால் பகுதிகளான உடல், உணர்வு, மனம், ஆன்மா ஆகியவை மலரும்.*

**அன்னை இலக்கியம்**

# பெண்ணின் பெருமை

இல. சுந்தரி

> பெண்ணின் இனிமையும், பெருமையும் யோகத்தை வாழ்வாகவும், வாழ்வை யோகமாகவும் மாற்றவல்லது. வாழ்வு யோகமாவது பெண்ணின் பெருமை. யோகம் வாழ்க்கையாவது பெண்ணின் இனிமை.
>
> **ஸ்ரீ கர்மயோகி**

சேவை ஸ்தாபனம் ஒன்றில் கடை நிலை ஊழியர் என்னும் அளவில் பணி செய்பவள் நான். நான் முன்பு வேலை செய்த வீட்டு எஜமானி பணிமாற்றல் பெற்று வேற்றூர் சென்றுவிட்டதால் அவருக்கு விஸ்வாசமாயிருந்த என்னை இங்கு வேலையில் சேர்த்துவிட்டு வயிற்றுப் பிழைப்பிற்கு வழி செய்ததோடு, பாமரப் பெண்ணாகிய எனக்கு 'ஆன்மிகம்' என்ற அற்புதத்தையும் பெற வழி செய்திருக்கிறார்.

என் பெயர் சாரதை. எனக்கு முப்பத்தெட்டு வயதாகிறது. மகப்பேற்றிற்கு வாய்ப்பில்லாதபடி, இளம் வயதில் வயிற்றுவலியால் துடித்த போது எனக்குச் செய்த அறுவை சிசிச்சையால் பாதிக்கப்பட்டேன். அதனால் திருமணம் கூடி வரவில்லை. பெற்றோரையும் இழந்தேன்.

அந்த நேரத்தில்தான் மூன்று சிறு குழந்தைகளுடன் தனியாக இருந்த என் எஜமானியம்மாள் வேலைக்குப் போய்வர மிகவும் சிரமப்படுகிறார் என்ற விபரம் தெரிய வந்து அவர்களிடம் வேலை கேட்டுச் சென்றேன். முழுநேரமும் வீட்டோடு இருக்கும் உதவியாள்தான் தனக்கு வேண்டும் என்றார்கள். ஆதரவற்ற நான் அவர்களுடன் தங்கி இட்ட வேலையைச் செய்வேன் என்றும், சோறும் துணியும் போதும். வேறு தேவை ஏதுமில்லை என்றேன். "அன்னையே! உன் கருணையே இது. இவளை நான் என் வீட்டு மனுஷியாகவே நடத்துவேன். நீரே இவளாக வந்தீர்" என்று அவர் வழிபடும் தெய்வத்திடம் நன்றி



கூறி என்னை வேலையில் சேர்த்துக் கொண்டார். அவர்கள் கணவர் வேற்றூரில் பணி செய்வதாயும் அவர் இவர்களுக்கு ஆதரவு தரவில்லை என்பதையும் நான் தெரிந்து கொண்டேன். எப்படியோ, எனக்கு ஆதரவளித்த அவர்கள் குடும்பப் பொறுப்பை, வீட்டு வேலை, சமையல், சாமான் வாங்குவது, குழந்தைகளை நர்சரியில் விட்டு, அழைத்து வருவது யாவும் பொறுப்பாகச் செய்தேன். எஜமானி நிம்மதியாகத் தம் அலுவலக வேலைகளைச் செய்ததோடு குழந்தைகளையும், என்னையும் அழைத்துக்கொண்டு ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் தியான கூடத்திற்குச் செல்வார். அங்கு அவர் சிநேகிதியின் ஆலோசனையை ஏற்று அன்னையைப் பிரார்த்தித்து என்னை வேலைக்காரியாய் பெற்றதை நன்றியுடன் கூறுவார்.

எஜமானியம்மாள் தம் அலுவலகத்தில் திறம்படப் பணியாற்றி பதவி உயர்வும், பணிமாற்றலும் பெற்று விட்டார்கள். குழந்தைகளும் 15, 16 வயதை அடைந்து விட்டனர். அவர்கள் கணவரும் எஜமானியின் அருமை உணர்ந்து வீட்டாருடனும் இவர்களுடனும் சேர்ந்து வாழ ஆரம்பித்தார். குழந்தைகள் ஹாஸ்டலில் சேர்ந்து படிக்கச் சென்றனர். எனவே, என்னைத் தொடர்ந்து வேலையில் வைத்துக் கொள்ள முடியாததாலும், எனக்கு வேறு சொந்தம் இல்லாததாலும் அவர் சிநேகிதியின் மூலம் எனக்கு இந்தச் சேவை ஸ்தாபனத்தில் நிரந்தர வேலை வாங்கிக் கொடுத்துவிட்டார்கள்.

இந்த ஸ்தாபனத்தின் முக்கியப் பொறுப்பேற்றிருக்கும் பெண் அதிகாரியும் என்போல் குடும்ப பந்தம் இல்லாதவர். அவர் மட்டும் இங்கு மாடியில்தான் தங்குவார். அவர் தேவைகளைக் கவனிப்பது என் பொறுப்பு. அலுவலக நேரத்தில் (காலை 9 முதல் மாலை 5 வரை) அங்குப் பணி புரியும் எல்லோர்க்கும் தேவைப்பட்டதை நான் செய்ய வேண்டும். சுத்தப் பணியும் என்னுடையது. ஓரளவு படித்திருந்த எனக்கு ஆங்கிலம் கற்கவும் ஏற்பாடு செய்தனர். அலுவலகப் பணிகளில் தபால் அனுப்புவது போன்றவற்றிற்குப் பயிற்சியும் அளித்தனர்.

இங்குப் பணியாற்ற பட்டப்படிப்பு மட்டும் முழுத் தகுதியாகாது. ஆன்மிக ரீதியில் செயல்படுவது ஸ்தாபனத்தின் முக்கியக் குறிக்கோளாயிருந்ததால் ஆன்ம நாட்டம் உள்ளவர்களே இங்கு அதிகம். அத்தகுதியைப் பெற பயிற்சிக் கூடம் போல் இவர்களுக்கு ஒரு தியானக் கூடம் இருந்தது. அங்குச் சென்று தியானம் செய்வதுடன் இங்குப் பணிபுரிபவர்களுக்காக சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெறுவதைக் கேட்டு அதன்படி நடக்கவும் ஏற்பாடு. என் பழைய எஜமானியம்மாளுடன் நான் முன்பே இங்கு வந்திருப்பதால் ஓரளவு தெரியும்.

இந்தச் சேவை ஸ்தாபனம் வெறும் தொழில் நிறுவனம் மட்டுமில்லை. இங்குப் பணியாற்ற கையாளும் ஆன்மிக முறைகள் (சுத்தம், ஒழுங்கு, சுயக்கட்டுப்பாடு, பணியை அர்ப்பணிப்பாகச் செய்தல், யாருடனும் சுமுகம் கெடாதிருத்தல், நாணயம், விஸ்வாசம், பலன் கருதாத தன்மை, தன் செயல் அடுத்தவர்க்கு நலன் விளைவிக்க வேண்டும் என்ற தன்னார்வம், பொறுமை, நிதானம்) மூலம் உள்ளிருக்கும் ஆன்மாவை செயலில் வெளிப்படுத்துவது இங்குள்ள இலட்சியம். எனவே, அப்படிப்பட்டவர்கள்தாம் இங்கு அதிகம். ஆரம்பத்தில் அப்படிப்பட்ட ஆர்வத்தில்தான் இங்கு வருவார்கள். ஆனாலும் ஆங்காங்கே மனித சுபாவம் வெளிப்படாதிராது. அங்குப் பயிற்சிக்காகத் தரப்படும் சொற்பொழிவைக் கேட்கும்போது அமைதியாகும் மனம் இங்குச் செயலுக்கு வரும்போது அலைபாய்வது பலருடைய அனுபவம்.

ஒருநாள் ஒரு அலுவலர் தம் சக அலுவலருடன் பேசியதை நான் கேட்க நேர்ந்தது. “கலாவுடன் சேர்ந்து பணி செய்யும் போது ஏதேனும் தகராறு வந்து விடுகிறது. நான் எவ்வளவுதான் விட்டுக் கொடுத்துப் போனாலும் அவள் தன் கடுமையை மாற்றிக் கொள்வதில்லை. எங்கே பொறுமையை இழந்து விடுவேனோ என்று ஆகிவிடுகிறது” என்றார் வசுமதி. அதற்கு அவர் தோழி, “அவசரப்படாதே வசு, அதுதான் நாம் கவனமாக இருக்க வேண்டிய இடம். சுமுகத்தை நம் அறிவு, உணர்வு, உடல், ஆன்மா, ஜீவன் யாவும் ஏற்க வேண்டும் என சொற்பொழிவில் கேட்டதை மறந்து விட்டாயா? பொறுமையை



இழக்காமலிருப்பது ஆன்மா சுமுகத்தை ஏற்றதன் அடையாளமல்லவா, அங்குச் சொற்பொழிவு தியரி கிளாஸ்தான். இங்குதானே நமக்குப் பிராக்டிகல் கிளாஸ்” என்று கூறியதை நான் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன். சம அந்தஸ்த்தும் திறமையும் உள்ளவரிடமே கடுமையாய் நடப்பவர் என்போன்ற சாமான்யருடன் எப்படி நடந்து கொள்ளக்கூடும் என்று நினைத்துப் பாருங்கள். “இதில் தேறும் போதுதான் நமக்கு அன்னை” என்று அவர் கூறியது எனக்கே கூறியதாய் எடுத்துக் கொண்டேன்.

அங்கு, எல்லோரும் என்னைவிட படிப்பு, பதவி, பணம், அந்தஸ்த்து என்று எல்லாவிதத்திலும் உயர்ந்தவர்கள். எனவே, எல்லோரும் என்னிடம் சில நேரங்களில் அலட்சியமாய் நடந்து கொள்வார்கள். நான் கவலை கொள்வதேயில்லை.

**“எவர் எப்படிப் பழகினாலும் நாம் பிரியமாய்ப் பழகினால்தான் நம் மனம் சரியாக இருப்பதாக அர்த்தம்”** என்று சொற்பொழிவில் கேட்டதை மனதில் பச்சைக்குத்தி வைத்திருந்தேன். யார் எந்த வேலையை மீதிவைத்து விட்டுப் போக நேர்ந்தாலும் அதை அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு அதாவது வேலையை முடித்துவிட்டு இன்றியமையாத அவசர நேரங்களில் file-ஐ எடுத்த இடத்தில் வைத்து டிராவை மூடி பொருட்களை அடுக்கிப் பூட்டாமல் போக நேரும் போது நானே பொறுப்பாக அவற்றைச் சரி செய்து அவர்களை விடுவிப்பேன். இங்குப் பணியாற்றுபவர்களுக்குக் குடும்பம், அது சார்ந்த கடமைகள் இருப்பதால் அவர்களுக்கு உதவியாக மளிகை, கறிகாய் வாங்கித்தரும் வேலையும் செய்வேன். ஆட்டோ வரவில்லையானால் குழந்தைகளை நானே நர்சரியில் கொண்டுவிட்டு அழைத்து வருவேன். வேலையைப் பெற்றுக்கொண்டு, என்னைச் சமமாக நடத்தினால் அவர்கள் மரியாதை குறைந்து விடும் என்ற அச்சத்தில் என்னை அலட்சியம் செய்து விட்டுப் போய் விடுவார்கள். நானோ **இதுதான் என் அகந்தை கரைய அன்னை செய்த ஏற்பாடு** என்று மனவலிபடாமல் விலகி விடுவேன். என் வாழ்வில் கடந்தகாலம் எனக்குக் குடும்பம் என்ற அமைப்பைக் கொடுக்காத சூட்சுமம் இப்போது புரிவது

போலிருந்தது. குடும்பம் என்ற அமைப்பில் விரிசல் வரும் போது அதை ஒட்டிவிடப் பயன்படும் (gum) பசையாக நான் இருக்க வேண்டும் எனப்புரிந்து கொண்டேன். யாருக்கு எந்த வேலை செய்தாலும் அதை அன்னைக்கு அர்ப்பணிப்பாகச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது.

இந்த ஸ்தாபனத்தின் வேலை நேரம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையில்தான் என்றாலும் சிலர் வேலையை முடிப்பதற்காக Night Duty என்ற அமைப்பு இங்கில்லாத போதும் வந்து சில மணி நேரம் வேலை செய்வார்கள். மற்ற என் பணிகள் முடிந்த பின்னும் இவர்களுக்காக நானும் விழித்திருந்து உதவி செய்வேன். சிலர் நன்றியுடன் நடப்பார்கள். சிலர் எவ்வித நெகிழ்வும் இல்லாது சென்று விடுவார்கள். இங்குப் பணிபுரிபவர் ஏற்று நடப்பதற்காகவே மாதாமாதம் ஆன்மிகக் கோட்பாடுகளை விளக்கிச் சொற்பொழிவுகள் நடக்கும். அவற்றைக் கேட்டுக் கேட்டு வயிற்றுப் பிழைப்பிற்கான வாழ்வு மறந்தே போனது. ஆன்மதாகம், அன்னைமீது நாட்டம் வந்துவிட்டது.

சொற்பொழிவுகளில் அன்னையின் பெருமையும், அவர் அவதார நோக்கமும் அடிக்கடி கூறப்படும். அதைக் கேட்கும் போது அன்னைக்கே வாழ வேண்டும் என்ற எண்ணம் எழுவது உண்மையானாலும், வெளியுலகத் தொடர்பு வரும் போது சுபாவம் மேலெழுந்து விடுவதைக் கவனித்தால் புரியும்.

**“ஆயிரம் காரணங்களுக்காக அன்பர்கள் அன்னையை விட்டு விலகுகின்றனர். அன்னையை நெருங்க அவர்கள் மனதில் ஒரு காரணமும் தோன்றுவதில்லை”** என்று அன்னையை ஆழமாக ஏற்ற அன்பர் ஒருவர் மனம் உருகிக் கூறிய சொற்கள் என் நெஞ்சின் உள்ளாழத்தில் ஆணி அடித்தாற் போல் வந்தமர்ந்தது.

நாளடைவில் இவர்கள் தங்கள் பணிகளை அனிச்சை செயலாகச் செய்ய ஆரம்பித்தார்கள் சொற்பொழிவைக் கடைப்பிடிக்க ஆர்வப்படவில்லை. ஆனால் என்னார்வம் குறையவில்லை. பிறப்பின்பயன் புரிந்துவிட்டது. அன்னை எனக்கு இன்றியமையாதவரானார். எனவே, யார் என்ன சொன்னாலும், எப்படி நடந்து கொண்டாலும் நான் மாறாதிருக்க



அன்னையைப் பிரார்த்தித்த வண்ணம் செயல்பட்டேன். என்னை உறுதிப்படுத்திக் கொள்ளும் நேரம் வந்தது. முக்கியப் பொறுப்பில் உள்ள (மேலதிகாரி) பெண்மணி சுபாவமாகவே கடுமையானவர். அவர் எவ்வளவுதான் மாறிக் கொள்ள முயன்றாலும் சுபாவம் முன்வந்து விடும். எனவே, கீழுள்ளவர்களிடம் கண்டிப்பு என்ற பெயரால் கடுமையாக நடந்து கொள்வார். மிகச்சிறந்த பணியாளர்களும் இவரால் மனம் புண்படுவர் ஒருவரோடொருவர் மன ஆறுதல் தேடி அவரால் தாம் புண்பட்டதைக் கூறி வருந்துவார்கள்.

**பக்குவமான நிதானமுடைய மனம் புண்பட்டபொழுது உள்ளே உள்ள கருணை அதைக் கரைக்கும் என்றறியாது ரணத்தை ஆற்றும் மனிதாபிமானத்தை நாடி, மனிதாபிமானத்தையே நிலை நிறுத்துவர். பெரிய மனிதனும் மனம் புண்பட்ட போது சிறிய மனிதனாகிறான்** என்று சொற்பொழிவில் கேட்ட கருத்து என்னுள் ஒலிக்கும். நான் ஆறுதல் கூறவோ, ஆறுதல் தேடவோ முயற்சி செய்யாமல் இங்கு ஏற்படும் மனவலி, அலட்சியப் போக்கு யாவற்றையும் விருப்பு, வெறுப்பின்றி ஏற்று மகிழப்பழகிக் கொண்டேன். இந்நிலையில் முக்கியப் பொறுப்பில் இருந்த பெண்மணி, பெரிய ஆர்வங்களோடு இங்குப் பணியாற்ற வந்தவர் என்று பாராட்டப்பட்டவர், நாளடைவில் இலட்சியம் மறந்து போய் தானே தலைவி, தன் கீழ்ப் பணியாற்றுபவர்கள் தன் விருப்பப்படி நடக்க வேண்டுமென எதிர்பார்த்துச் செயல்பட ஆரம்பித்தார். இது மேலிடம் தொடங்கிச் சிறிது சிறிதாகப் பரவி அனைவரையும் பற்றிக் கொண்டது. இதன் விளைவு எல்லோராலும் நான் அதிகாரம் செய்யப்படவும் அலட்சியப்படுத்தப்படவும் ஆளானேன். என் இலட்சியம் **அன்னையே** என்பதை வலுப்படுத்த ஏற்பட்ட வாய்ப்பாகப் புரிந்து கொண்டு புண்படாத மனத்துடன் பணிவுடன் நடந்து கொண்டேன்.

இவையாவும் ஏதோவொரு நாடகம் போல் மேலிருந்து யாரோ இயக்குவது போல் தோன்றியது. இந்நிலையில் ஸ்தாபனத்தில் சுமுகக் குறைவு ஏற்பட்டு, வெளியுலகில் இதன் பெயர் கெட்டுவிடும் நிலை உருவானது. அப்போதுதான் அது

நடந்தது. தீமை முழுமை பெற்றவுடன், நன்மை உருவாகும் என்ற வாசகம் நினைவு வந்தது.

ஸ்தாபனத்தின் முக்கியப் பொறுப்பிலுள்ள பெண் அதிகாரி விலகிட, புதிய முக்கியப் பொறுப்பாளர் வரப்போவதாக அனைவரும் கூடிக் கூடிப் பேசிக் கொண்டனர். நான் எது பற்றியும் கவலை கொள்ளவில்லை. யார் எனக்கு என்ன வேலை கொடுத்தாலும் பொறுமையுடன் எவ்வித எதிர்பார்ப்புமின்றி அன்னை நினைவுடன் சந்தோஷமாகச் செய்து கொண்டி-ருந்தேன். பழைய மேலதிகாரி வேலையை விட்டு விலகி-விட்டார். இனிப் புதியவர் வருகையை அனைவரும் எதிர் நோக்கியிருந்தனர். நானோ எந்த எதிர்பார்ப்புமின்றி சொற்-பொழிவில் சொல்லப்பட்ட கருத்துகளை — **சுய ஆனந்தம் எழ சுயநலமான அகந்தை அகன்று அழிய வேண்டும், திட்டு அதிர்ஷ்டத்தின் டிரான்ஸ்பர் ஆர்டர், மன வலியை உள்ளே உள்ள கருணை கரைக்கும், நாம் செய்யும் வேலை அடுத்தவரைப் பாதிக்கக் கூடாது, யாருடனும் சுமுகம் கெடக் கூடாது, சுத்தமும் சத்தமின்மையும் அன்னை, நம்முள் அன்னை உள்ளார் என்பதையுணர்ந்து, நான் கருவி இல்லை. கர்த்தாயில்லை, செயலுக்கு நான் எந்தவகையிலும் தேவையில்லை** — மனதில் நிறுத்தி எனக்கு இடப்பட்ட பணிகளைச் செய்த வண்ணமிருந்தேன்.

அந்த நாளும் வந்தது. காலை ௯ மணிக்கு ஊழியர்கள் அனைவரும் தயாராகி, வரும் அதிகாரியை வரவேற்கச் சித்தமாயிருந்தனர். இங்கு ஆடம்பரம், ஆரவாரம் இரண்டும் விலக்கப்பட்டதால் அமைதியுடன் அனைவரும் காத்திருந்தனர்.

சாரதை! இப்போது புதிய அதிகாரி வரப் போகிறார். உள் வேலைகளை (முக்கிய பொறுப்பிலுள்ள வரும் மேலதிகாரிகள் மட்டும் இங்கு மேலே மாடியறையில்தான் தங்குவார்கள். அவர்கள், காலைச் சிற்றுண்டி முதல் உணவுத் தேவைகளைக் கவனிப்பது என் பொறுப்பு) முடித்துவிட்டு இங்கே வந்துவிடு என்றனர். கூறியபடியே வந்து விட்டேன். அவரவர் டேபிள்களை விட்டு வெளியே இருபுறமும் நிற்க, சற்றுப் பின்னால் ஒதுங்கி நானும் நின்று கொண்டேன்.



அழகிய பென்ஸ்கார் ஒன்று வாயில் முகப்பில் வந்து நின்றது. என் மனம் அதை புஷ்பகவிமானமாகக் கண்டது. அதிலிருந்து இறங்கி வந்த தேவதை போன்ற பெண் அதிகாரியின் முகத்தில் பொலிந்த புன்னகை அரவிந்த அன்னைக்கே உரிய தெய்வீகப் புன்னகை. பெருந்தன்மை, கனிவு, சமரசம் நிறைந்த புன்னகை. மெத்தென்ற திருவடிகளைப் பூப்போல் எடுத்து வைத்து உள்ளேவர அனைவரும் கைக்கூப்பி புன்னகை செய்ய அந்தத் தேவதையும் கையைக் கூப்பிய வண்ணம் அனைவரையும் விழிகளால் வருடியது. மென்மையாகச் சிரித்த வண்ணம் அனைவரையும் கடந்து வந்து ஒதுங்கி நின்ற என் தோள்மீது கையைப் பதித்து அணைத்த வண்ணம் உன் பேர்? என்றது.

உடம்பெல்லாம் மின்சாரம் பாயும் சிலிர்ப்பு எனக்கு. அவர்கள் அகத்தின் அழகைப் பிரதிபலிக்கும் முகமலர்ச்சி, விழிகளின் சிரிப்பு, அவர்களின் தெய்வீகத்தை உணர்த்தும் நறுமணம், அந்த மணம் தாழம்பூவின் மணம். ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனேன். இன்னும் உனக்குப் பெயரே வைக்கவில்லையா? என்று சிறு குழந்தையிடம் விளையாடுவது போல் கேட்கவே விழித்துக் கொண்டேன். என் பெயர் சாரதை என்று தணிந்த குரலில் கூறினேன்.

அனைவரையும் அன்புடன் நோக்கி, நீங்கள் உங்கள் பணிகளைத் தொடருங்கள் என்று கனிவுடன் கூறினார். வரும் அதிகாரிகளைக் கவனிக்கும் பொறுப்பிற்குரிய முகிலன் அதற்காக முன் வந்தார். நீங்கள் மற்ற வேலைகளைப் பாருங்கள். சாரதை என்னுடனிருப்பாள். நான் பார்த்துக் கொள்கிறேன் என்று, தனக்கு யாரும் உதவிக்கு வரவேண்டாம் என நயமாகத் தடுத்து விட்டார்.

‘சாரதை! வா,’ என்று நீண்ட நெடுங்காலம் பழகிய தோழியைப் போல் என்னை உள்ளே அவருக்குரிய கேபினுக்கு அழைத்துச் சென்றார்.

‘அம்மா! டிபன் எடுத்து வரவா?’ என்று மிகப் பணிவுடன் மெல்லிய குரலில் கேட்டேன். ‘எடுத்து வரவேண்டாம். நானே அங்கு வருவேன்’ என்று இனிமையாய்க் கூறி சமையற்-கூடத்திற்கே என்னுடன் வந்தார். அதுவொரு சிறிய

சமையற்கூடம். இங்கேயே தங்கிவிடும் மேலதிகாரிகளுக்கு உணவளிக்க ஏற்பட்டது. இரவில் அதிக நேரம் இருந்து பணி செய்பவர்களுக்கும் இங்கு உணவோ, டீ, காபியோ நான் தயாரித்துத் தர வேண்டும். நான் வேலைக்கு வந்தது முதல் இது என் பொறுப்பு. தேவையான சமையற்பொருட்களைத் தட்டுப்பாடின்றி வாங்கி வைத்து விடுவேன். இந்த இடத்தையும் கோயில் போல் பக்தியாகக் கையாள்வேன்.

உள்ளே வந்தவர் எல்லாவற்றையும் பார்வையிட்டார். என்னைப் பாராட்டுவது போல் புருவத்தை உயர்த்தி கண்கள் மலர அவருக்கே உரிய முத்திரைச் சிரிப்பை உதிர்த்தார்கள். நான் எந்தவுலகில் இருக்கிறேன் என்று எனக்குப் புரியவில்லை. உள்ளே ஆனந்தம் அலைமோதியது. ஹாட்பேக்கில் **(hotpack)** இட்டு வைத்திருந்த இட்லி, தோசைகளில் இரண்டு எடுத்து பிளேட்டில் வைத்து, சட்னி கப்பை ஸ்பூனுடன் அருகில் வைத்தேன். நாற்காலியில் அமர்ந்த வண்ணம், உனக்கு? என்றார்கள். அதிர்ந்தே போனேன். அவர் எத்தனை முக்கியத்துவம் வாய்ந்த அதிகாரி. நானோ கடைநிலை ஊழியர் என்று எல்லோராலும் ஒதுக்கப்படும் சாதாரணப் பெண். என்னை அவர் சமமாக நடத்துவது எனக்கே தாங்கவில்லை. மற்றவர் கண்டால் எப்படித் தாங்குவர்?

நீங்கள் சாப்பிட வேண்டும் என்று உபசரித்தேன். ஏன் நீ இன்று விரதமா? என்று என்னைக் கேலி செய்தார். இல்லை-யில்லை. அன்னைக்கு விரதம் ஏற்றதில்லை என்று அவசரமாய் என்னையறியாமல் கூறிவிட்டேன். ஓ! அப்படியென்றால் டிபனை எடுத்துக் கொண்டு இப்படி வா என்றார். அதில் ஒரு தாயின் பரிவு இருந்தது. சிறிதும் அதிகாரம் இல்லை. உருகிப் போனேன். எப்படி இதைச் செய்வேன்? மனம் துணியவில்லை. “நீ வரமாட்டாயா? நானும் இன்று விரதம்” என்று எழுந்துவிட்டார்கள். “தயவு செய்து சாப்பிடுங்கள்” என்று என்னையறியாமல் எழுந்திருந்த அவர்கள் கையைப்பற்றி உட்கார வைத்தேன். நீ என்னை விட்டு விடுவாயா என்ன? என்பது போல் என்னை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, அவருக்கே உரிய அன்னையின் முத்திரைச் சிரிப்புடன் அவர்



கையைப் பிடித்திருந்த என் கையைப் பார்த்தார்கள். அப்போதுதான் என் அதீதச்செயல் புரிந்து சட்டென்று கையை எடுத்தேன். ஆனால் அந்தத் தெய்வம் மேலும் மேலும் எனக்குச் சச்சிதானந்த அபிஷேகம் செய்தது. ‘பரவாயில்லை வா. வந்து உட்கார். என்னுடன் சாப்பிடு’ என்றார்கள். தட்டில் இரண்டு இட்லிகளுடன் வந்தேன். நின்ற வண்ணம் உண்பதா தரையில் அமர்ந்து விடலாமா என்று நான் தவித்துக் கொண்டிருக்கும் போது நாற்காலியைத் தன் பக்கமாக நகர்த்தி என்னைப் பிடித்திழுத்து அதில் உட்காரச் செய்து விட்டார்கள். என் நிலை எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். நாற்காலி விளிம்பில் உட்கார்ந்து மிகுந்த தயக்க உணர்வுடன் இட்லியைச் சாப்பிட்டு முடித்து கைகழுவி அவர்கள் கை கழுவ குழாயைத் திறக்கவும், கையைத் துடைத்துக்கொள்ள டவலைக் கொடுக்கத் தயாராகவும் நின்றேன். என் செயல்களைக் கண்டு ரசித்துச் சிரித்த வண்ணம் கைகழுவ வந்தார்கள். கை கழுவி நான் கொடுத்த துண்டில் கையைத் துடைக்காமல் மிகுந்த குறும்புப் பார்வையுடன் என் புடவை முன்றானையில் கை துடைத்துக் கொண்டார்கள். அந்த அன்பு, உரிமை யாவும் என்னை நெகிழச் செய்தது (இந்த வரியை இங்கு எழுதும் போது என் கண்கள் கசிந்துருகுவதை அன்னையே அறிவார்). **‘You are perfect’** என்றார்கள். வெட்கத்தால் கூசிப் போனேன். (“ஒன்றும் போதா நாயேனை உய்யக் கொண்ட நின் கருணை” என்று இந்த மனநிலையில்தான் பாடியிருப்பார்களோ?)

‘சரி. நீ ரூமைக் கிளீன் செய்துவிட்டு, ஒரு கப் சூடான காபி-யுடன் கேபினுக்கு வா’ என்று மெல்ல என் முதுகில் தட்டிய வண்ணம் கூற மகிழ்ச்சிக் கடலில் மிதந்த வண்ணம் தலை-யாட்டினேன். ஏதோவொரு ஆனந்த வெள்ளத்தில் மிதந்த வண்ணம் ரூமைக் கிளீன் செய்துவிட்டு என் நெஞ்சத்து அன்பையெல்லாம் கொட்டி ஒரு கப் காபி தயாரித்து எடுத்துக் கொண்டு கேபினுக்குப் போனபோது இடக்கையால் இண்டர்-காமில் இனிமையாக ஏதோ உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டே, வலக் கையால் கம்ப்யூட்டரில் செயல்பட்டுக் கொண்டிருந்தார். ரசித்த வண்ணம் நின்றிருந்த என்னை

புன்னகை பூத்த முகத்துடன் தலையசைத்து வா என்று ஜாடை செய்தார்கள். இரண்டு கைகளாலும் காபி கோப்பையை ஏந்திக் கொண்டு பணிவுடன் பக்கத்தில் போய் நின்றேன். மேனனும், சக்ரவர்த்தி சாரும் 'மே ஐ கம் மின் மேம்?' என்று கேட்க, புன்னகை மாறாத முகத்துடன் 'எஸ் ப்ளீஸ் கம்' என்றார்கள். இடக் கையால் என் கையிலிருந்த கோப்பையை எடுத்துக் கொண்டு வலக்கையால் அவர்களிடம் சில பைல்களைக் கொடுத்து விளக்கினார்கள். அவர்களும் அதைப் பெற்றுக் கொண்டு வெளியேறினார்கள். காபியைப் பருகிய வண்ணம், கண்கள் மலர்ந்து பாராட்டைத் தெரிவித்து, 'நீ காபி குடித்தாயா?' என்று எத்தனை பரிவுடன் கேட்டார்கள். இல்லை என்று தலையசைத்து கப்பை வாங்கிக் கொண்டேன். அவர்கள் அன்பில் என் இதயம் நெகிழ்ந்து கண்ணீராய் வெளிப்பட மெல்லத் துடைத்துக் கொண்டேன். கப்பை எடுத்துக் கொண்டு சமையலறைக்கு வந்த நான், என்னை மறந்து உணர்ச்சி வசப்பட்டு, அம்பாளின் வெற்றிலைப் பாக்கு எச்சிலை சுவைத்த மூகனைப் போல் எஞ்சிய சொட்டுக் காப்பியை அண்ணாந்து வாயில் கவிழ்த்துச் சுவைத்து சந்தோஷமாய்ச் சிரித்துக் கொண்டேன். அதே நேரம் பின்னால் யாரோ வருவது போன்றதொரு உள்ளுணர்வு தூண்ட திரும்பினேன். அவர்கள் தான் கையைக் கட்டிக் கொண்டு தலையைச் சாய்த்து என் செயலை ரசித்துக் கொண்டிருந்தார்கள். குற்றவுணர்வாலும், வெட்கத்தாலும் முகம் வியர்த்து படபடப்பானேன். 'ஒன்றும் தவறில்லை' என்று இதமாகக் கூறினார்கள். கோப்பையை மேடை மீது வைத்துவிட்டு ஓடிப்போய் அவர்கள் பாதங்களில் குனிந்து மன்னிப்பு வேண்டினேன். 'நீ தவறொன்றும் செய்ய-வில்லை. என்னைக் கண்டு பிடித்துவிட்டாய்' என்றார்கள். 'மதியவுணவு தயாரித்துவிட்டு எனக்கு வேலையில் உதவி செய்ய கேபினுக்கு வந்துவிடு' என்றார்கள். எனக்கு என்ன தெரியும். பெரிய அதிகாரிக்கு வேலையில் நீலமேகம் சார்தான் உதவி செய்வார். அவரை விடுத்து என்னைப் போய் அழைக்கிறாரே என்று ஒரே குழப்பமாயிருந்தது. சொல்லி விடுவோமா என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே என்



மனதைப் படித்தவர் போல் நீலமேகத்தை வெளியில் ஒரு வேலையாக அனுப்பி விட்டேன் என்றார்கள். வியப்புக் கூடியது.

அவர்கள் கூறியது போல் மதியவுணவு சமைத்தேன். எனக்கு இதில் திறமை ஏதுமில்லை. இருந்த அன்பையெல்லாம் கொட்டிச் சமைத்தேன். சமையல் முடித்து யாவற்றையும் பக்குவமாய் மூடிவைத்துவிட்டு கேபினுக்குச் சென்றேன். 'வா' என்பது போல் புன்னகைத்துத் தலையசைத்தார். அருகில் சென்றவுடன் சில பைல்களை எடுத்து என் கைகளில் கொடுத்தார். பழக்கமே இல்லாததால் என்ன செய்வதென்று புரியாமல் மலைப்புடன் இரண்டு கைகளையும் நீட்டிப் பெற்றுக் கொண்டேன். அந்த அறையில் புதிதாக ஒரு டேபிளும் சேரும் சற்று தள்ளிப் போடப்பட்டிருந்தது. 'வா' என்று என்னை அந்த டேபிளுக்கு அழைத்துச் சென்று, 'இந்தா இப்படி வைத்துக் கொள். பைலைப் பிரி. இந்தா பேனா. நான் சொல்வது போல் செய்' என்று அந்த பைலில் படித்து நான் கண்டுபிடிக்க வேண்டிய செய்தி அதைப் பற்றி நோட் எழுதக் கற்றுக் கொடுத்தார்கள். முன்பின் அறிந்திராத அப்பணியை எப்படிச் செய்தேன் என்றறியாமல் செய்துவிட்டேன். பைலையும், நோட் தயாரித்ததையும் அவர்களிடம் கொடுத்தேன். 'வெரிகுட்' என்றார்கள். அப்போதுதான் 'மே ஐ கமின்' என்ற காயத்ரி என்னிலையைக் கண்டு வியந்தாள். 'காயத்ரி கமின்' என்று அவளை அழைத்துவிட்டு 'இந்தா சாரதை அந்த பைலையும் வாங்கிக் கொள்' என்று காயத்ரி கொண்டு வந்த பைலையும் என்னிடம் கொடுக்க வைத்தார். அதை வாங்கி நான் என்ன செய்யப் போகிறேன் என்று காயத்ரி என்னை வியப்புடன் பார்க்க 'இதிலும் நோட் எடுத்து விடு' என்றார்கள். நான் ஓரளவு படித்தவள் என்று அங்குள்ளோர்க்குத் தெரியும். இங்கு வந்தவுடன் ஆங்கிலத் தனிப் பயிற்சியும் கொடுத்தார்கள். ஆனால் எனக்குப் பணியில் யாரும் பயிற்சியளிக்கவில்லை. இன்று இவர்கள் இதைத் தொடங்கி வைத்தார்கள்.

மதியம் மணி ஒன்று. கேபினுக்கு வெளியே வந்து, 'நீங்களெல்லாம் சாப்பிடப் போகவில்லையா?' என்று அன்புடன் விசாரித்தார்கள். எல்லோரும் ஓய்வறையில் உணவு கொள்ளச்

சென்றனர். மீண்டும் கம்ப்யூட்டரில் வேலை தொடங்கினார்கள். நானும் எனக்களித்த வேலையைச் செய்தேன். மணி 1.30 'வா வா. சாப்பிடப் போவோம்' என்று முதுகில் தட்டினார்கள். பைல்களில் அவர் கொடுத்த வேலையை முடித்துவிட்டிருந்தேன். அவர் டேபிளில் ஒரு புறம் அடையாளமாக வைத்துவிட்டு அவரைப் பின் தொடர்ந்தேன். கை கழுவிக் கொண்டு டைனிங் டேபிள் முன் வந்தமர்ந்தார்கள். நானும் கை கழுவிக் கொண்டு பிளேட் எடுத்து வைத்து, சமைத்த உணவுப் பண்டங்களை டேபிளில் கொண்டு வைத்துப் பரிமாறத் தயாரானேன். 'நானே பரிமாறிக் கொள்வேன். நீயும் வா' என்று உடன் சாப்பிட அழைத்தார்கள். என் நிலை தர்ம சங்கடமாயிற்று. அவருடன் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடுவது எனக்குக் கூச்சமாய் இருந்தது. நாற்காலி விளிம்பில் அமர்ந்து எப்படியோ சாப்பிட்டு எழுந்து விட்டேன். அவர்கள் ஒவ்வொரு பதார்த்தத்தையும் சிறிது சுவைத்துவிட்டு, 'வெரிகுட் வெரிகுட்' என்றார்கள். சிறப்பாகச் சமைக்கத் தெரியாத நான் அவர்மீது கொண்ட நன்மதிப்பால் அன்பைக் கொட்டிச் சமைத்தேன். என்ன சொல்வார்களோ என்று நினைத்தேன். இவர்களோ வெரிகுட் என்கிறார்கள். தெய்வம் பொய் கூடப் பேசுமா என்று நினைத்தேன். நான் பொய்யேதும் சொல்லவில்லை சாரதை. ஒவ்வொன்றிலும் உன் அன்பைத்தான் சுவைக்கிறேன் என்று என் நினைவிற்குப் பதில் போல் கூறினார்கள். எனக்கு உடம்பெல்லாம் சிலிர்த்தது. யாரிவர்? மேலதிகாரிதானா? அந்த வேடத்தில் வந்த தெய்வமா? என்று என் சிந்தனை ஓடியது.

வேஷம் போட்டு நடிக்கிறேன் என்று நினைக்கிறாயா? என்றார். இல்லையில்லை நீங்கள் நீங்களேதான் என்றேன். மாலை அலுவலக நேரம் முடிந்து யாவரும் விடை பெற்றுச் சென்று விட்டனர். நானும் அவரும் மட்டுமேயிருந்தோம். பழைய மேலதிகாரி மாலை 6 மணிக்கெல்லாம் தியானகூடம் சென்று விடுவார். 8 மணிக்குத்தான் வருவார்கள். நான் அவருக்கு இரவு நேர சிற்றுண்டி தர காத்திருப்பேன். உண்ட பிறகு மேலே அவர்கள் அறைக்குப் போய் விடுவார்கள். இரவில் அவருக்குப் பசும்பாலருந்தும் பழக்கமுண்டு. அதைப்



பிளாஸ்க்கில் கொடுத்துவிட வேண்டும். அத்துடன் என் வேலை முடிந்து விடும். கீழே சமையலறையைப் பூட்டிவிட்டு மேலே என் அறைக்குப் போய்விடுவேன். இந்தப் புதிய மேல் அதிகாரியோ எல்லாவற்றிலும் வித்யாசமாயிருப்பதால் ஒன்றும் புரியவில்லை.

'சாரதை! என்ன நினைக்கிறாய்? நான் எங்கும் வெளியில் செல்வேன் என்றா? இல்லை **எனக்கு எப்போதும் உள்ளேதான் வேலை**' என்றார். புரியாது நின்றேன். 'மேலே போகலாம் வா' என்றார். உடன் சென்றேன். 'உனக்கு எங்காவது போக வேண்டுமென்றால் போய்வா. தியானக் கூடம் செல்வாயா?' என்றார். 'பயிற்சிக்காகச் சொற்பொழிவு செய்வார்கள். அப்போது மட்டும்தான் போவேன். எனக்குத் தியானம் வராது. ஆனால் அன்னையைப்பற்றிய இனிய நினைவுகளுடன் அவருக்குப் பிடித்தது போல் வேலையைச் செய்து கொண்டிருப்பேன்' என்றேன். 'உன் சாதனை முறையானதுதான்' என்றார். ஏதேதோ உயரிய கருத்துகள் ஆன்மிகம் தொடர்பாகப் பேசினார்கள். பரம சிஷ்யையாய் இருந்து கேட்டுக் கொண்டேன். இரவு 8 மணி ஆயிற்று. சாப்பிட அழைத்தேன். 'போகலாமா?' என்றார். 'நீங்கள் கீழே இறங்கி வரவேண்டாம். தோசை வார்த்துச் சூடாக நானே இங்குக் கொண்டு வருகிறேன்' என்றேன். 'நீ தவறாகச் சொல்கிறாய். நான் இரங்கி வரவில்லையென்றால் உன் போன்றோர் நிலை என்ன?' என்றார் குறும்பாக.

உண்மைதான் என்று எண்ணிக் கொண்டேன். சிரமம் பாராது உடன் வந்தார். விரைவில் அடுப்பை ஏற்றி தோசைக்கல்லை அடுப்பின் மீது வைத்துவிட்டு பிரிஜ்ஜிலிருந்து தோசைமாவு வைத்திருந்த பாத்திரத்தை எடுத்தேன். சூடாக மெல்லிதாக தோசை வார்த்து பிளேட்டில் வைத்தேன். 'தொட்டுக் கொள்ள சட்னி வைக்கவா, பொடி வைக்கவா?' என்றேன். 'பொடி வைப்பது எனக்குப் பிடிக்காது' என்று என்னைக் குறும்பாகப் பார்த்துச் சிரித்தார். எனக்கு வெட்கமாயிற்று. 'உங்களுக்கு எது பிடிக்குமோ அதைச் செய்து தருகிறேன்' என்றேன். 'இங்கே வா' என்றார். ஏதோ சொல்லப் போகிறார் என்று அருகில் சென்றேன். 'இப்படி உட்கார்' என்றார். தயங்கியபடியே உட்கார்ந்தேன்.

இடக்கையால் என்கையைப் பிடித்துக் கொண்டு வெறும் தோசையைச் சாப்பிட்டார்கள். துடித்துப் போனேன். ‘என்ன பார்க்கிறாய்? வெறும் தோசை என்றா? இல்லை சாரதை உன் அன்பு முழுவதும் இதில் சுவைக்கிறது. எனக்கு உணவுச் சுவையைவிட பக்திச் சுவையே பிடிக்கும்’ என்றார். இவருடைய ஒவ்வொரு சொல்லும், செயலும் என்னை உருக வைப்பதை என்னென்பேன். என் நெஞ்சம் உருகி கண் வழியே வந்து விடுகிறது. கை கழுவ நீர் வார்த்தேன். மதியவுணவருந்தியபின் என் சேலை முன்றானையில் அவர் கை துடைத்துக் கொண்ட ஆனந்த நினைவுடன் நானே என் சேலை தலைப்பை நீட்டி விட்டேன். சிரித்துக் கொண்டே கையைத் துடைத்துக் கொண்டார்கள். சற்று வரம்புமீறி விட்டேனோ என்று சஞ்சலம் வந்தது.

‘சரி. நீ சாப்பிட்டுவிட்டு மேலே வா. நான் இன்றிரவு நிறைய வேலைகளை முடித்துவிட்டு நாளை புறப்பட வேண்டும்’ என்றார்.

‘அதற்குள்ளாகவா?’ என்று பதறினேன். ‘வந்த வேலை முடிந்தால் போக வேண்டியதுதானே’ என்றார். ‘வந்த வேலையா? அதற்குள்ளாகவா முடிந்தது?’ என்றேன். ‘நான் உள்ளே வந்தவுடன் வேலை முடிந்து விட்டது. உனக்காகத்தான் இன்னும் இருக்கிறேன்’ என்றார். அவர் பூம் பாதங்களைப் பற்றிக் கொண்டு அழுதேன்.

‘தியானம் பழக்கமில்லை. வேறு ஏதோ செய்வேன் என்றாயே, அதைச் செய்’ என்று குறும்பாய்க் கூறிய வண்ணம் சென்றார்கள்.

இரவு மடிக்கணிணியில் நிறைய வேலை செய்தார்கள். என்னை அருகே அழைத்துப் பக்கத்தில் உட்காரச் சொன்னார்கள். மிகுந்த மரியாதையுடன், கூச்சத்துடன் உட்கார்ந்தேன். அந்தக் கணிணிப் பொறியைப் பயன்படுத்தக் கற்றுக் கொடுத்தார்கள். ‘நீண்ட நேரம் ஆகிவிட்டது. இந்தா. இது உனக்கே. பொறுமையாய் எல்லாவற்றையும் தெரிந்து கொள்’ என்று அந்தப் புத்தம் புதிய கணிணியை எனக்கே அளித்தார். விழிநீர் பெருகப் பெற்றுக் கொண்டேன்.



அவருக்கென இடப்பட்ட படுக்கையைச் சரி செய்து புதிய விரிப்பை விரித்தேன். ‘நேரமாகிவிட்டது. படுத்துக் கொள்ளுங்கள்’ என்றேன். ‘எனக்கேது நேரம் காலம்? காலத்தை, கடந்ததை, கடந்ததைக் கடந்தவள் நான்’ என்று கூறிய போது அந்த முகத்தின் பிரகாசம் அன்னை முத்திரையான பூஞ்சிரிப்பு என்னை என்னவோ செய்தது. ‘விஸ்வரூப தரிசனமா! என்ன பிரமித்துவிட்டாய்? அன்னையை நினைத்து நினைத்து யாவும் உனக்கு அவராகத் தெரிகிறது’ என்று என்னைக் கேலி செய்தார். அந்தப் பாதங்களில் முகம் பதித்தேன். சிரித்தார்கள் மனமில்லாது எழுந்து விடை பெற்றேன். ‘குட்நைட்! காலையில் பார்ப்போம்’ என்றார்கள். அன்று முழுதும் அனுபவித்த ஆன்மிக சுகந்தம் என்னை மெய்ம்மறக்கச் செய்தது. அயர்ந்து உறங்கிவிட்டேன். கண் விழித்த போது காலை 6 மணி. அலறி அடித்துக் கொண்டு எழுந்தேன். பல்துலக்கி, முகம் கழுவி காபி தயாரிக்க சமையல் அறையைத் திறக்க நினைத்த போது உள்ளே விளக்கு எரிந்தது. எப்படி? வியப்புடன் உள்ளே சென்ற நான் தடுமாறிப் போனேன். அவர்களே பால் காய்ச்சி டிகாஷன் போட்டிருக்கிறார்கள். பழைய அதிகாரியாயிருந்தால் இந்நேரம் வசைமாரி பொழிந்திருப்பார்கள். இவரோ வா என்று புன்னகையுடன் அழைத்தார்கள். ‘எப்போதும் தவறியதில்லை. இனியும் இத்தவற்றினை செய்யமாட்டேன்’ என்று மன்னிப்பு வேண்டினேன். ‘உன் அன்பைப் பெற்ற எனக்கு ஒரு வாய்ப்பளித்தாய்’ என்றார். நான் அவருக்குச் செய்ய வேண்டியதை அவர் எனக்குச் செய்தார். கோப்பையில் காப்பியை ஊற்றி என்னிடம் தந்தார். அவர் முன் அதைப் பருகத் தயங்கினேன். ‘பரவாயில்லை குடி’ என்றார்கள். தயக்கத்தோடு பணிவாக அதைக் குடித்துவிட்டேன். தெய்வத்திற்கு நிவேதித்ததை பிரசாதமாக எல்லோரும் பெறுவார்கள். இங்கோ தெய்வமே எனக்குத் தயாரித்தளிக்கிறது என்று நினைத்தேன். என்னைப் பார்த்துச் சிரித்தார். புதிய மேலதிகாரி வருவார். உன் சாதனா முறையைத் (அன்னை நினைவுடன் அன்னைக்குப் பிடித்ததைச் செய்வது) தொடர் என்றார். நான் பிரிவுத் துன்பத்தால் பற்றப்படுமுன் அவர் “நான் பௌதிகம் களையப் போகிறேன். இனி என்னை அங்கே (என் நெஞ்சைத் தொட்டுக்

காட்டி) காண்” என்றார்கள். உச்சந் தலை முதல் உள்ளங்கால் வரை சிலிர்த்துக் கரைந்தேன்.

அவர் விட்டுச் சென்ற நினைவும், ஸ்பரிசமும் இனிக்கப் பணியைத் தொடர்ந்தேன்.

மீண்டும் புதிய மேலதிகாரி வரப் போகிறார். எப்படியிருப்பாரோ என்ற எதிர்பார்ப்பு எனக்கில்லை. என் தெய்வத்தின் நினைவும் தீண்டலும் என்னைச் செம்மையாக இயங்க வைக்க, நான் கருவியில்லை, நான் கர்த்தாயில்லை. இந்த வேலைக்கு நான் தேவையுமில்லை என்று அன்னையை என்னுள் செயல்படவிட்டுச் சும்மாயிருந்து சுகம் பெறுகிறேன்.

(முற்றும்)

## ஜீவிய மணி

*நாம் அன்னையை அறிய முயலும் பொழுது நம் பலனைக் கொண்டு கணிக்கக் கூடாது. ஸ்ரீ அரவிந்தர் அன்னையை எப்படி வர்ணித்திருக்கிறார் என்று அறிய வேண்டும். நம்மைச் சூழ்ந்துள்ள காற்றை நாம் அறிவதில்லை. அதன் அத்தியாவசியத்தை மேல் நாட்டினர் தற்சமயம் கண்டு கொண்டனர். ஏராளமாக இருக்கும் பொழுது நினைவில் வராத காற்றை, அது கெட்டுப் போய் மூச்சடைக்கும் பொழுது நினைக்கிறோம். ஆகர்ஷண சக்தி என ஒன்று உள்ளது என்பதைப் புத்தகம் படிக்கும்பொழுது நினைக்கிறோம். மற்ற நேரம் மனத்தை அது தொடுவதில்லை. அப்படியிருக்க, நாம் எப்படி அன்னையை அறியப் போகிறோம்?*

*அன்னை நம்மைச் சூழ்ந்தும், உள்ளே நிறைந்தும் இடைவிடாது நம் எண்ணங்களில் கலந்தும், உணர்ச்சிகளில் ஊடுருவியும், செயலாக மாறியும் உள்ளார்.*

*அன்னையே எல்லாம், நாமே அன்னை.*
*நம் நினைவும் அன்னை, மறதியும் அன்னை.*

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# பகுத்தறிவும் ஆன்மிகமும்
## (Intellectuality and Spirituality)

காவிய கண்ட கணபதி முனி என்பவர் ஆந்திர நாட்டு முனிவர். கபாலி சாஸ்த்திரி அவர் சிஷ்யர். முனிவர் ரமணரைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரைப் போய்ப் பார்த்து அவருக்கு ரமண மகரிஷி எனப் பெயரிட்டு குகையிலிருந்து மலையடி-வாரத்திற்குக் கொண்டு வந்து ஆசிரமம் ஏற்படுத்தினார். அவர் பகவான் தரிசனத்திற்கு வந்து அவரை புராதன புருஷர் என வருணித்தார். அவர் கண்ட ரூபம் புராணி, 1923-இல் கண்ட திவ்ய சொரூபம். பகவான் அவர் அறையில் நடப்பதைக் கண்ட சாதகர் அவருக்கு ராஜ கம்பீரம் உண்டு என்றார். **Antony Trollope** எழுதிய **Ayala** என்ற கதையில் கதாநாயகியின் தாயார் பேரழகி எனப் பெயர் பெற்று ரஷ்ய ராஜகுமாரன், பெரும் பிரபுக்களால் கவரப்பட்டவர். அவள் அன்பிற்காக ஒரு ஓவியரை மணந்தார். அவள் மறைவு தாங்காமல் அவரும் இறந்து, பெண்களை அவர் அநாதை ஆக்கினார். அவர் கலை சம்பாதித்த பெரும் பணம் பெருவாழ்விற்காக வரும்முன் செலவு செய்யப்பட்டது. அவர் இல்லம் கலைஞர்கள், ஓவியர்கள், சிற்பிகளால் அலங்கரிக்கப்பட்டது. அயாலா 19 வயது. அவள் தமக்கை 21 வயது. அவர்கள் வாழ்வு இலண்டனில் அன்று பெருவாழ்வு. ஆடம்பரம் அழகை விளக்கும் அற்புதம். அந்தஸ்த்தை ஆடம்பரமாக அனுபவிக்கும் அவர்கள் வாழ்வு அனைவரையும் கவர்ந்தது. அதிகாரம் காரமிழந்த பிரியமாக பிரியம் பிறர் மனம் இனிக்கும் பழக்கமாக உறவு சேவையாயிற்று. பெண்கட்கு பெற்றோர் பிரியமாகச் செய்த சேவை குழந்தைகள் மனம் இயல்பாக லட்சியமாயிற்று. பயம் எழவில்லை, போட்டி தெரியாது, பொறாமை மனதில் படவில்லை. அயாலா கற்பனை உலகில் சொர்க்கத்தை உருவாக்கினாள். அங்கு அரண்மனையில்

*(தொடர்ச்சி பின்பக்க அட்டையில்)*

*(முன்பக்க அட்டை தொடர்ச்சி)*

அரசிளங்குமரனைக் கண்டாள். அவனைக் கணவனாக மனதில் வரித்தாள். அவள் தவிர அடுத்தவர் அதை அறியவில்லை. அவள் கற்பனை நிஜமா என்ற கேள்வி அவளுக்கு எழவில்லை. ஆடம்பர வாழ்வில் செய்வதற்கு வேலையில்லை. பார்வைக்குச் சோம்பேறியின் ஆடம்பரம் எனத் தோன்றும். அதுவே அவள் நோக்கமாகி (attitude) லட்சியம் ஆர்வத்தின் இனிமையாயிற்று (aptitude). பெண்கள் சுபாவம் இந்நிலையில் பூரணம் பெற்றதை ஆசிரியர் **accomplished aptitude of idle luxury** என்கிறார். வீடு குடும்ப-மாயிற்று. பெண்கள் புனிதமாயினர். ஒரு சிற்பி, வீட்டிற்கு வந்தவரை பெரிய பெண் கண்டு வியந்து மகிழ்ந்தாள். அம்மகிழ்ச்சி காதல் உணர்ச்சி என அவளுக்குப் புரியும்முன் இதயங்கள் கலந்து லட்சியம் இயல்பாகியது. செல்வமும், ஏழ்மையும் புறவாழ்வில் வேறுபடுவதை அவர் உள்ளம் அறியவில்லை. இறந்து போன தாயாரின் தமக்கை கோடீஸ்வரனை மணந்தாள். அவள் அயாலாவை அழைத்துப் போனாள். அவள் மகன் Tom பெரும் பணம் படைத்த மனம் வளராத அறிவிலி. அயாலாவிடம் மனதை பறிகொடுத்தான். அவனால் தொந்தரவு பொறுக்க முடியாவிட்டாலும் அயாலாவுக்கு அவன் மீது வெறுப்பு எழவில்லை. ஒரு கர்னலும், ஒரு பணக்கார கேப்டனும் அயாலாவை Tom போலவே மனமுருகி விரும்புவது அனைவருக்கும் ஆச்சரியமாக இருக்கிறது. அன்பர் வாழ்வில் அவர்களை அறியாமல் உருவான நோக்கம் இங்கு நயமாக சித்தரிக்கப்-படுகிறது. அன்னையின் ஆன்மிகம் அன்பர் வாழ்வைச் சுகமாக (cosy) செய்ததை அவர் அறியார். ஆன்மிகம் தரும் இதம் மனம் முதிர்ந்து ஆன்மாவாகும் வாழ்வு. அன்னையை அறிவது பாக்கியம், ஏற்பது யோகம்.

**Accomplished Aptitude of Idle Luxury.**